37

33 / 4.5

திராவிட மாயை

அ. கபிலராஜன்

OF THE REGISTRAR OF BOOKS
10 MAY 1951



V211, 4
N51
112141

...ராவிட மாயை

அ. கயிலைராஜன்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 MAY 951
MADRAS

0-8-0

சுதர்சன் & கோ.,

தேவகோட்டை.

முதல் பதிப்பு:
மார்ச் 1951.

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 112141
EGMORE, MADRAS-600 008

உரிமை பெற்றது.

விலை எட்டணா.

அச்சிட்டோர்:
யுனைட்டெட் பிரிண்டர்ஸ், காரைக்குடி.

கல்வி அமைச்சர் ஸ்ரீ சி. சுப்பிரமணியம் அவர்களின்

முன்னுரை

ஆங்கில ஆதிக்கம் வேரூன்ற ஆரம்பித்தது சென்னையிலே. அடிமைத் தளையைக் களைந்தெறிந்து சுதந்திரத்தைப் பெற வழி தேடிய காங்கிரஸ் ஸ்தாபனம் உருவானதும் சென்னையிலே. சுதந்திர இயக்கத்துக்கு உயிர் தந்த மகாத்மா காந்திஜியின் சத்யாக்கிரக இயக்கமும் சென்னையிலேதான் கருத்தரித்தது. இந்தியாவின் லட்சியம் பூர்ண சுதந்திரம் என்று தீர்மானிக்கப்பட்டதும் சென்னையில் நடந்த காங்கிரஸ் மஹாசபையில்தான். சோஷலிஸப் பாணியில் சமுதாயம் அமைக்கப்பட வேண்டுமென்று முடிவு கண்டதும் ஆவடி காங்கிரஸில். இவ்வாருக, தமிழ் நாட்டுக்கும் இந்திய தேசிய காங்கிரஸுக்குமுள்ள நெருங்கிய தொடர்பை ஆசிரியர் பி. ஸ்ரீ இந்நூலில் எடுத்து விளக்கியிருக்கிருர். சுதந்திர இயக்கம் வட இந்தியாவில் ஏற்பட்டதென்றும், காங்கிரஸ் ஸ்தாபனம் வட இந்தியரின் ஸ்தாபனமென்றும் கூறுபவர்க்கு இப்புத்தகம் நல்ல பதில் கூறுகின்றது.

இந்தியாவின் சுதந்திர இயக்கத்தை நல்ல முறையில் பி. ஸ்ரீ சித்தரித்துக் காட்டியிருக்கிருர். இவ்வியக்கத்தில் ஈடுபட்ட எல்லாப் பெரியார்களைப் பற்றியும், அதிலும் முக்கியமாகத் தமிழ் நாட்டுத் தலைவர்களைப் பற்றியும் விரிவாக இந்நூலில் எடுத்துரைத்திருக்கிருர். இந்தியாவின் சமீப கால சரித்திரத்தை அறிய விரும்புவோர்களுக்கு இப்புத்தகம் பெரிதும் பயன்படுமென்று நம்புகிறேன்.

இன்றைக்குத் தமிழ் நாட்டிலே தமிழன் என்றும் ஆரியன் என்றும் வேற்றுமை கூறி, தென்னுடும் வட நாடும் பிரிய வேண்டுமென்று வாதாடுவோரின் கூற்றுக்கு, இப்

புத்தகம் நல்ல முறையில் பதிலளித்திருக்கிறது. தொன்று தொட்டுக் கலாசாரத்திலும் பண்பாட்டிலும் இந்தியர்கள் ஒற்றுமையைக் கண்டிருக்கிறார்கள். இன்று அரசியல் மூலமாகவும் அவ்வொற்றுமை பூர்ணத்வம் அடைந்திருக்கிறது. இவ்வொற்றுமையைக் குலைக்க விரும்புவோர்கள் தேசவிரோதிகள் என்பதே இப்புத்தகத்தின் அடிப்படை.

இப்புத்தகத்தை நல்ல முறையில் எழுதி வெளியிடும் பி. ஸ்ரீ அவர்களுக்கு என் வாழ்த்து.

சென்னை
15-3-55

சி. சுப்பிரமணியம்

படிக்கும் முன்...

V2", 4
N151

வகுப்புவாதத்திற்கு மருந்து வகுப்புவாதமா?

அரசியல் ஞானமுடையோரும், நிஜப் பகுத்தறிவு வாதிகளும் இதை ஒப்பமாட்டார்கள்; ஒப்ப முடியாது. ஆனல், 'எண்ணப் புரட்சிதான் எதுவும் சாதிக்கும்' என்பதில் நம்பிக்கைகொண்ட திராவிட இயக்கத்தார், வகுப்புவாதத்தை ஒழிக்கப்போவதாகச்சொல்லி, நேர்மாருக பிரதி வகுப்புவாத அணியை உருவாக்கி வருகின்றனர்.

பிராபணீயமும் சரி, இதர எந்த ஜாதிய—வகுப்புவா[illegible] சரி, இத்துச் செத்து அல்லது சாகடிக்கப்பட்டு சமாதி அடையத்தான் வேண்டும். ஜன சமூகத்துக்கெல்லாம் அறிவில் புரட்சி வருவது எப்போ? இந்த ஜாதி சமயப் பூசல்கள் ஒழிவது எப்போ? உடனடிச் செயலுக்குச் சாத்தியமாகாத எந்தக் கொள்கையும், இருந்தும் இல்லாததே ஆகும்!

மனித சமூதாயத்தை மாற்றியமைக்கக் கூடிய சக்தி பொருளாதார சமத்துவத்துக்கான செயல்—புரட்சியே! அந்த சமத்துவத்திலேயே சமூக விடுதலை உள்ளடங்கிக் கிடக்கிறது.

வர்க்க விரோதிகளுடன் பிராமணரல்லாதார் என்ற காரணத்திற்காகக் கொஞ்சிக் குலவுவதானது—நல்ல பாம்புக்குப் பால் வார்க்கும் சேவையை ஒத்ததாகும். 'பகுத்தறிவுவாதிகளின்' கண்களை "திராவிட மாயை" எனும் பொய்த் தோற்றம் மறைத்திருக்கிறது. இந்நூல் அதைத் துடைத்துப் போக்கி, மெய்த் தோற்றம் காண்பிக்குமா என்பதை வாசகர்களே தீர்ப்புக்கூற வேண்டும்.

—அ. கயிலைராஜன்

புத்தகம் நல்ல முறையில் பதிலளித்திருக்கிறது. தொன்று தொட்டுக் கலாசாரத்திலும் பண்பாட்டிலும் இந்தியர்கள் ஒற்றுமையைக் கண்டிருக்கிறார்கள். இன்று அரசியல் மூலமாகவும் அவ்வொற்றுமை பூர்ணத்வம் அடைந் திருக்கிறது. இவ்வொற்றுமையைக் குலைக்க விரும்பு வோர்கள் தேச விரோதிகள் என்பதே இப்புத்தகத்தின் அடிப்படை.

இப்புத்தகத்தை நல்ல முறையில் எழுதி வெளியிடும் பி. ஸ்ரீ அவர்களுக்கு என் வாழ்த்து.

சென்னை
15-3-55

சி. சுப்பிரமணியம்

படிக்கும் முன்...

V2", 4
N51

வகுப்புவாதத்திற்கு மருந்து வகுப்புவாதமா?

அரசியல் ஞானமுடையோரும், நிஜப் பகுத்தறிவு வாதிகளும் இதை ஒப்பமாட்டார்கள்; ஒப்ப முடியாது. ஆனல், 'எண்ணப் புரட்சிதான் எதுவும் சாதிக்கும்' என்பதில் நம்பிக்கைகொண்ட திராவிட இயக்கத்தார், வகுப்புவாதத்தை ஒழிக்கப்போவதாகச்சொல்லி, நேர்மாருக பிரதி வகுப்புவாத அணியை உருவாக்கி வருகின்றனர்.

பிராமணீயமும் சரி. இதர எந்த ஜாதிய—வகுப்புவா[illegible] சரி, இத்துச் செத்து அல்லது சாகடிக்கப்பட்டு சமாதி அடையத்தான் வேண்டும். ஜன சமூகத்துக்கெல்லாம் அறிவில் புரட்சி வருவது எப்போ? இந்த ஜாதி சமயப் பூசல்கள் ஒழிவது எப்போ? உடனடிச் செயலுக்குச் சாத்தியமாகாத எந்தக் கொள்கையும், இருந்தும் இல்லாததே ஆகும்!

மனித சமுதாயத்தை மாற்றியமைக்கக் கூடிய சக்தி பொருளாதார சமத்துவத்துக்கான செயல்—புரட்சியே! அந்த சமத்துவத்திலேயே சமூக விடுதலை உள்ளடங்கிக் கிடக்கிறது.

வர்க்க விரோதிகளுடன் பிராமணரல்லாதார் என்ற காரணத்திற்காகக் கொஞ்சிக் குலவுவதானது—நல்ல பாம்புக்குப் பால் வார்க்கும் சேவையை ஒத்ததாகும். 'பகுத்தறிவுவாதிகளின்' கண்களை "திராவிட மாயை" எனும் பொய்த் தோற்றம் மறைத்திருக்கிறது. இந்நூல் அதைத் துடைத்துப் போக்கி, மெய்த் தோற்றம் காண்பிக்குமா என்பதை வாசகர்களே தீர்ப்புக்கூற வேண்டும்.

—அ. கயிலைராஜன்

உங்களுக்கு !

பள்ளியில் படிக்கும், புதுமை தேடித் துடிக்கும் மாணவர் களுக்கும் அறிவுப் பசி கெ[illegible]ட வாலிபர்களுக்கும், பலர் கருத் தையும் அறிய விரும்பும் உங் களுக்கும் விருந்தாக வைக் கிறோம்.

ராசி

படியுங்கள்.

'நிர்வாகி'

1

(அ) முடி தாங்கிகளின் அடி தாங்கிகள்!

'ஆரிய மாயைக்கு' இது எதிர்ப்பு போலும் என்று நினைத்து இதைப் பிரித்துப் பார்த்தீர்களானல் நிச்சயம் ஏமாற்றமடைவீர்கள். ஆரியமும் மாயைதான்,- திராவிடமும் மாயைதான்—அதாவது இவை மங்கி மறையும் மாஜி உண்மைகள் என்பதை விளக்கி, எது நிஜம் என்பதைக் கூடியவரை உணரவைப்பதே இந்நூலின் நோக்கம்.

ஆரியர் யார்?

கி. மு. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர், கிழக்கத்திய ஐரோப்பா, மத்ய ஆசியா முதலிய பிரதேசங்களில், ஆடு, மாடு, குதிரை போன்ற கால்நடைகளையே தங்கள் ஜீவன சாதனங்களாகவும், மூலதனமாகவும் கொண்டு, அண்டை அயலாருக்கு விற்றும் — பண்டம் மாற்றியும் பிழைத்து வந்த—மஞ்சள் கலப்புள்ள சிவப்பு நிற—அன்றைய அதிக நாகரீகமில்லாத மனிதர்கள், வடமேற்கு எல்லையிலுள்ள கைபர் கணவாய் வழியாக இந்தியாவுக்குள்ளும் பிரவேசித்தார்கள்.

பிறந்து வளர்ந்த பிரதேசங்களில், ஜனத்தொகை மிகுதியாகி யிருப்பதற் கேற்ப உணவு தானியங்களும், கால்நடைத் தீனிகளும் போதிய அளவு கிடைக்காததால் "தேவை" அவர்கள் கழுத்தை நெறித்தது. உற்பத்திக் கருவிகள் பெருகாததே இதற்குக் காரணம். பலமுள்ள மனிதக்கூட்டம் பலஹீனமுள்ள மனிதக் கூட்டத்தை விரட்டி அடித்தது. போரில் தோல்வியுற்ற கூட்டம் தங்கள் ஒரே சொத்தான கால்நடைகளைப் பத்திக் கொண்டு திபேத் வழியாக சீனுவுக்கும், கைபர் வழியாக வட இந்தியாவுக்கும் ஓடிவந்து குடியேறின.

வட இந்தியப் பிரதேசத்தில் அப்போது மனிதர்கள் இல்லாமலில்லை. உணவு உற்பத்தியுடன்கூட உடை உற்பத்தியும் தெரிந்திருந்த மனிதர்களே அதுபோது வடக்கேயும் தெற்கேயும் வசித்து வந்தனர். தங்கள் பிழைப்புக்கு உலைவைக்க ஒரு புதக்கூட்டம் வருகிற தென்று, அன்றை வட இந்திய வாழ் பிரஜைகளும் அவர்களை விரட்டியடிக்கப் போருக்கு ஆயத்தமாயினர். ஆனல் இவர்கள் கட்டுப்பாடின்றிப் போராடியதால் அவர்களை (வந்த ஆரியர்களை) ஜெயிக்க முடியவில்லை.

மேலும் ஆரியர் தம்முடன் கொணர்ந்த கால்நடைகள் இவர்களுக்குத் தேவையா யிருந்தது. மனிதனே கஷ்டப்பட்டு நிலத்தைக் குத்திப் பண்படுத்துவதைவிட,- மாடுகளும், குதிரைகளும் அவன் உடல் சிரமத்தைக் குறைத்தன. ஆடு குதிரை மாமிசமும் அவர்களுக்கு வேண்டிய அளவு கிடைத்தன. எனவே உணவு தானியங்களும் துணிகளும் கொடுத்து ஆரியரிடம் அதிகப் படியான கால்நடைகளை விலைக்கு வாங்கினர். பரஸ்பரம் அவர்களுக்குள் உற்பத்தி சாதனங்கள் (கால்நடைகள்-ஏர் கலப்பைகள்) பரிமாறப்பட்டு இரு சாராரும் நிலத்தை நம்பி உழுது பயிரிட்டுப் பிழைக்கலாயினர்.

ஆரம்பத்தில் ஆரியர் சிவப்பு நிறத் திமிரால் தனித்து வாழ்ந்து வந்தனர். பிறகு வட இந்திய வாழ் பெண்களைக் கல்யாணம் செய்து கொண்டனர். அதிகச் சொத்துக்களை (அதாவது நிலம், கால்நடைகள், ஏர்

கலப்பைகள், தறி, பொன் போன்றவைகள்) வைத்திருக்கும் பிரதேசவாசிக்கு, ஆரியர் தம் பெண்களையும் கொடுத்தனர். நாளடைவில் இரு தரப்பு இரத்தங்களும் கலந்ததால்—ஆரியரது மஞ்சள் நிறம்போய் வெளுமைச் சிவப்பு நிறமும் கருமைச் சிவப்பு நிறமுமுள்ள சந்ததிகள் பிறந்து வியாபித்தனர்.

தனித் தனிக் கூட்டமாக வந்து குடியேறியதால் தனித் தனியாக வம்சத்திற்குப் பெயர் சூட்டிக்கொண்டு பிரதேசக் குடிகளுடன் கலந்தனர்.

பிறகு ஜனத்தொகை அதிகரிக்கவே மனிதரின் "தேவை" அதிகரித்தது. மீண்டும் பலமுள்ள கூட்டத்திற்கும் பலம் அதிகமற்ற கூட்டத்திற்கும் வடக்கே போர் மூண்டது. அந்தப் போரில் உயிரைப் பாதுகாக்க பல திக்குகளுக்கும் தோல்வியுற்ற கூட்டம் ஓடியது. அதில் வங்கம் பர்மாவுக்குமாக ஒரு பெருங் கூட்டமும், விந்தியத்துக்குத் தெற்கே தென்னாட்டுக்கு பல கூட்டங்களும் கால் நடைச் சொத்துக்களுடன் ஓடிவந்து குடியேறின.

இந்தப் பிரதேசங்களிலும் தென்னாடுவாழ் திராவிடக் குடிகளுக்கும்—ஆரியர்க்கும் சிறு சிறு சண்டை மூண்டது. ஆனால் மனிதரின் தேவை அதிகரிக்க அதிகரிக்க, கால்நடைகளின் தேவையும், மனித உழைப்பு சக்தியின் தேவையும் அதிகம் வேண்டியிருந்தது. அங்கு போலவே இங்கும் பெண் கொள்ளவும் பெண் கொடுக்கவும் செய்து கலந்தனர். தெற்கே உஷ்ணப் பிரதேசத்துக் கருநிறக் குடிகளுடன் இரண்டறக்கலந்த வடக்கத்தியக் கூட்டம் நாளடைவில் செந்நிறத்தையும் இழந்து, இனம் பிரித்துப் பார்க்க முடியாத கருமைச் சிவப்புடன் தோற்றமளித்தது.

தெற்கே வந்த ஜனக்கூட்டம், இங்கே உணவு, உடை உற்பத்தித் திறமையுடன்கூட புதிதான ஒன்றையும் கண்டது. அதுதான் பாஷை. (அது தமிழாக இருக்கக்கூடும் என்று ஆராய்ச்சியாளரால் நம்பப்படுகிறது.) வடக்கே பேச மட்டும் ஏதோ ஒரு மொழி இருந்தது. ஆனால் தெற்கத்தியார் தாங்கள் பேசுவதை இலைகளிலும் ஓலைகளிலும்,

மணல்—கற்களிலும் எழுதி மற்றேருக்கு வாய் பேசாம லேயே புரிய வைத்தனர். இந்த அதிசயத்தைக் கண்ட புதுக் குடிகள், தாங்கள் விட்டுவந்த பழைய இனத்தவ ருடன் இங்கிருந்தே செய்திகளை அனுப்ப—க்ஷேமலாபம் விசாரிக்க—இந்த பாஷையையும் எழுத்துக்களையும் ஆர்வத் துடன் கற்றனர்.

கற்ற சிலர் அவசியம் ஏற்பட்டபோது வடக்கே சென்று, தம்மினங்களுக்கு இந்த அதிசயத்தைக் கற்றுக் கொடுத்தனர். அவர்கள் அந்தப் பிரதேசத்திலும் வெளி யூரிலிருப்பவரிடமும் பேசிக் கொள்வதற்காக இதை உப யோகித்தனர். ஆகவே தெற்கிலிருந்து சென்ற எழுத்து ஞானம் அந்தந்தப் பிரதேசக் குடிகளின் உச்சரிப்புக்குத் தகுந்தாற் போன்று பல்வேறு உருவங்கள் பெற்று, பல் வேறு பாஷைகள் ஆயின. ஆரிய திராவிடக் கலப்பின் பழம் சரித்திரம் இது. பாஷை பிறந்து வளர்ந்த கதையு மாகும். ஆரியமும் திராவிடமும் வேறுபாடு காண முடி யாதபடி சுமார் 2000 ஆண்டுகட்கு முன்பே கலந்துவிட்ட தாகச் சரித்திர வரலாறு கூறுகிறது.

(ஆ) முடி மன்னர் உதயம்:

சொத்துக்கள் அதிகம் உள்ளவன் அவற்றைப் பாதுகாக்க ஆயுதபாணிகளைக் கூலிக்கு அமர்த்தினன். சொத்துச் சேமிப்பு அதிகரிக்க அதிகரிக்க ஆயுதபாணிகளும் அதிகரித்துப் 'படை' பலமாயினர். வலியவன், படைபலத்தில் சிறியவனை ஹிம்சித்து வென்று, அவன் சொத்துக்களையும் படையையும் கைப்பற்றி "அரசன்" ஆனன். பல சிறிய அரசர்களுக்கு அதிக படை பல முள்ள ஒருவன் வரி வாங்கிக்கொண்டு சக்கரவர்த்தி ஆனன்.

சொத்துச் சேகரிப்பதும் பெருக்குவதும் சுகபோகமுமே அன்றைய நிலப்பிரபுத்வ அரசர்களின் இலட்சியம், படை பலம், நீதி மன்றம், சிறை, சிரச்சேதம், போன்றவைகள் அவர்கள் ஏற் படுத்திக் கொண்ட உறுதுணைச் சட்டங்கள் ஆயுதமில்லா மலேயே பயமுறுத்திப் பாதுகாக்க மதமும், 'கடவுள்களும்' குறுக்கு வழியாகக் கையாளப்பட்டன.

இதைப் பரப்பி ஏழை எளியவரின் எதிர்ப்புப் ''போரை'' ரணகளறி யில்லாமலேயே சமாளிப்பதற்கு ரிஷிகள் (முனிவர்), குருக்கள், பூசாரிகள் என்ற படித்த மனிதர்களை அரசன் கூலி கொடுத்து அமர்த்திக் கொண்டான். இவர்கள் தங்கள் சொந்த வயிற்றை நிரப்புவதுடன் திருப்திபெற்று, ''நீங்கள் கர்மபலனை அனுபவிக்கிறீர்கள். பிறர் சொத்துக்கு ஆசைப்படாமல், திருடாமல், கொலை கொள்ளை செய்யாமல், பெரிய இடத்துப் பெண்களை நினைக்காமல்-உழைத்துப்போடுங்கள். இம்மையில் புண்ணியமும், மறுமையில் மோக்ஷமும், மறுபிறவியில் உயர்பிறவியிலும் பிறப்பீர்கள். நம்ப மறுப்போருக்கு நரகமே சம்பவிக்கும்'' என்று மிரட்டி மோசடிசெய்து ஏய்த்தனர்.

தங்கள் அரசர்களையே 'கடவுள்' களாகக் கவிதைகளால் பாடி வாழ்த்தினர். அதற்கு இனாம்களும் பெற்றனர். ஏமாறும் பொதுமக்களிடமிருந்தும் உண்டியல், காணிக்கை என்று கூறிப் பணமும் சேகரித்துக் கொண்டனர்.

பேராசிரியப் பேரறிஞர் ராகுல் சாங்கிருத்யாயன், சமஸ்கிருத மூலத்தில் இதிகாச புராணங்களை அலசி ஆராய்ந்து சில உண்மைகளை வெளியிடுகிறார்.

'கண்ணன் காட்டிய வழிக்குக்' காரணமாகிய 'மஹா பாரதத்தின்' ஒரு பகுதியை மட்டும் எடுத்துக் கொள்வோம்.

துரோணர், அஸ்வத்தாமா போன்ற படித்த—அந்நாளைய அரச பரம்பரையின் வில்வித்தைக் கலை ஆசிரியர்கள், பாண்டவர் வம்சத்தினர் பக்கம் நீதி இருக்கிறதென்று தெரிந்துமே கூலிக்காக—கொள்கைக்கோ நேர்மைக்கோ அல்ல (துரியோதனன் உணவு கொடுத்தான் என்பதற்காக) கௌரவர்களுடனிருந்து போர் புரிந்தனர் என்று பகிரங்கமாக எழுதப்பட்டிருகிறது.

தவிர, கிருஷ்ணன் என்ற அரசன் ராஜ தந்திரத்தில் திறமையுள்ளவனாக யிருந்தமையால் அவன் தயவை இருதரப்பாரும் விரும்பினர். அந்தக் கிருஷ்ணன் அந்நாளைய ரிஷிகளுக்கும், கவிகளுக்கும், கோவில் பூசாரிகளுக்கும் பணம் கொடுத்துத் தன்னையே 'கடவுளாகப்' பாடச் சொன்ன ஒரு காமுக அரசன். அவனுக்கு இரு மனைவியரும் ஏராளமான யாதவப் பெண்மணிகளும் (கால்நடைகள் மேய்க்கும் பெண்கள்) போகப் பொருள்கள். ஸ்நானம் செய்யும் ஸ்திரீகளின் புடவைகளைத் தூக்கிச் சென்று 'நிர்வாணக் கலையை' ரஸித்ததை எல்லாம், கூலிகளைக்

கொண்டு "பகவான் லீலை" என்று பாடச் சொன்னான். இன்னும், பல ஆயிரம் பேரை 'வீரன்' என்ற பெயரால் பத்தினிகளாக்கிப் பின் நடுத் தெருவில் பரத்தையராக விட்டுச் சென்ற அர்ஜுனனுக்கு, ஆப்த நண்பன் என்ற காரணத்தால், தெரிந்திருந்தும்—அழகியான தன் தங்கை சுபத்திரையையும் மணம் முடித்துக் கொடுத்தான். பீமனுக்கும் அவ்விதமே பெண்களெல்லாம் வெறும் போகக் கருவிகள். தர்மனோ தன் பெயருக்கு நேர் எதிர்மாறாக துரௌபதியையே-கொண்டவளையே-சூதாட்டத்திற்குப் பந்தயம் கட்டிய கல் நெஞ்ச சூது வெறியன். மேலும் அந்த ஒருத்தியை அழகி என்ற காரணத்துக்காக ஐவரும் கூடி 'விபச்சாரி' ஆக்கி விட்டு, துரியோதனனது பரிகாசப் பிரச்சாரத்துக்குப் பயந்து வெளி உலகத்தாருக்கு, "நாங்கள் ஐவீரும் ஒற்றுமையால் ஒருவரே. ஆகவே துரௌபதை பத்தினிதான்" என்று பறை சாற்றிய பாதகர்கள்!

இவர்களுக்கு கிருஷ்ணன் உதவி! எப்படி இருக்கிறது? நீதியைப் போதிக்கும் கண்ணன் எப்படிப்பட்டவர்களுக்கு எப்படி வழி காட்டினான் பார்த்தீர்களா? கீதைக்கு ஆசிரியன் தனக்குத்தான் நேர்மையுள்ளவன் தானா?

நாம் பார்க்கிறோம்: சொத்து சுகத்துக்காக கால்நடை, நாடு, நகரப் பொருமை போட்டிக்காக—இரு சுய நல ஆரிய அரச வமிசத்தினர் போராடியது உண்மை. இதைத் தவிர எந்தப் பொது மக்களுக்காகவும் கண்ணன் வழிகாட்டி விடவில்லை. அதற்குப் பதிலாக அவனது நய வஞ்சகத்தையும், நீதியற்ற நிர்மூடத் தனத்தையுமே பார்க்கிறோம்.

ராமாயணத்தில் ராமனிடம் மட்டும் என்ன வாழ்கிறதாம்! இவன் அப்பன் தசரதனுக்கு 63003 மனைவியராம். சூரியகுல வமிசத்தைக் கருவறுக்க சபதமிட்ட பரசுராமன், மணக் கோலத்து மன்னனைக் கொல்லமாட்டானும். அதற்குப் பயந்து அவன் படையெடுப்பின் போதெல்லாம் மணம் செய்து கொண்டானும்! கண்ணால் பார்த்தவளும்-கரத்தால் தொட்டவளெல்லாம் மனைவிபோலும்! முடி காக்க இது ஒரு வழிபோலும்! இவனும் ஒரு காமுகர்ளின் தலைவன். தன் ஆசைக் கிளத்தி கைகேயியின் காலடியில் கிடந்து அவள் சூழ்ச்சிக்கு பலியானவனே போதை மயக்கத்தில்! உலகிற்குப் பயந்து உண்மையை மறைத்து, முனிவர் மூலம் தான் 'யோக்கியன் போல் செய்தியைப் பரப்பினான்.

இவன் மகன் ராமன் என்ற அரசன் ஏகபத்தினிவிரதன் என்று வர்ணிக்கப்படுகிறது. ஆனால் அவன், தாதிப் பெண்டிர் வந்து உடம்பைத் தேய்த்துவிடாவிட்டால் குளிக்கமாட்டானும்! இவனுக்கு இப்படிப்பட்ட அநேக பெண்களுடன் நட்பு உண்டு என்று கோசலைக்கும் சீதைக்குங்கூடத் தெரியும். ஆனால் தவருக வெளியிட்டுவிடக்கூடாது! அவனே அரசன்; தலை போய்விடும்! இவன்தான் தன் காலத்தில், தன்னைக் கடவுளாகப் பாடுபவருக்கு 'ஆயுள் பரிசு' வழங்கியவன். வசிஷ்டர், விஸ்வாமித்திரர், வால்மீகி முதலிய ரிஷிகளெல்லாம் இவனை அண்டிப் பிழைத்தவர்கள். இவன் ஆக்ஞைக்குப் பயந்து "கடவுள் அவதாரம்' என்றும் 'நீதியின் வடிவம்' என்றும் புகழ்ந்து எழுதினர்! சீதையுடன் இருக்கவேண்டிய தாதியர்க்கு ராமனிடம் என்ன ஜோலி? அதுவும் நூற்றுக் கணக்கான இளம் பெண்கள் அரண்மனைக்கு எதற்கு? இதுதான் ரகசியம், அரசபரம்பரையே ஆடம்பர சுகபோகிகள்! அதற்காகவேதான் அவர்கள் தர்பாரையும்-படையையும்–நீதியையும்–கோவில் குளங்களையும்–யாகங்களையும் உபயோகித்தனர்.

இந்த ராமன், தென்னாட்டு திராவிட அரசன் இராவணன் மீது படையெடுத்து ஜெயித்தான். அநாகரீகமாக காட்டில் பிழைத்து வந்த மனிதப்படையை குரங்கு என்றே வர்ணித்துவிட்டான், கூலிக் கவிஞன்! மேலும் இந்த திராவிட அரசன் ராவணனும் பெரிய அயோக்கியன். இவனுக்கு அழகிகள் எங்கிருந்தாலும் தன் அந்தப்புரத்திற்கு வந்துவிட வேண்டும். இந்திரபுரி என்ற வடகிழக்கு நாட்டிலுள்ள மன்னன் இந்திரனது தர்பார் நடனக்காரிகளான ரம்பை, ஊர்வசி முதலியோரின் அழகைக் கேள்விப்பட்டு, மகன் இந்திரஜித் மூலம் படை அனுப்பி ஜெயித்துப் பலாத்காரமாகத் தூக்கி வந்தவனே.

மேலும் வடக்கத்தியர் ஜனப் பெருக்கத்தால் தென்னாட்டிற்கு வர வர, தம் நாட்டின் தேவையும் நெருக்கடியும் அதிகரித்துத் தொல்லை வளரும் என்று கருதியே இவனும் ஆரிய அரசர்களை விரோதிகளாகக் கருதிப் போர் புரிந்தான்.

ஆகவே அந்நாளில் எகிப்து, கிரீஸ், இத்தாலி, வட இந்தியா, தென்னிந்தியா முதலிய வளர்ச்சியுற்ற நிலப் பிரபுத்வ முடி அரச பரம்பரையினர் எல்லாம் சொந்த சுயநல சுக போகிகளே தவிர்த்து—பண்டிதர்கள் பாடியும் எழுதியும் வைத்தது போல் 'கடவுள்' களோ, அல்லது—பாடு படுபவர்களின் பங்காளர்களோ அல்ல.

பின்னல் தோன்றிய ஹர்ஷன்கூட, தன் காமக் கோரிக்கைகளை மறைக்க 'கலைஞன்' என்று தன்னைக்கவிராயர்களால்பாடச் சொன்னுன். அரசாங்கக் கவி ஒருவன் பாடிய காவியத்தைத் தான் பாடியது என்று ஜனங்களிடம் நம்ப வைத்துப் பிரச்சாரம் செய்திருக்கிருன். ராஜபுத்திர அரசன் ஜெயச்சந்திரன் எழுபது ஆண்டுகளுக்குப் பிறகும் நிர்வாண தர்பார் நடத்திய தாக சரித்திரச் சான்று கூறுகிறது. *

அசோகனைப் போல், அக்பரைப் போல் தனிப்பட்ட அரசர்களின் மனமாற்றமும்—நல்ல பண்பும்—ஆயிரத்தில் ஒன்ருகும்.

முடியாட்சியில் சிறந்தது என்றும், தீமையுள்ளது என்றும் தனித்துக் கூற எதுவுமில்லை. 'நல்ல பாம்பின் விஷம் உடலுக்கு நலம்' என்பது போல்தான் இதன் பொருள் அமையும். மக்கள் நல விரோதத்துக்கும் தீமைக்கும் உறைவிடமே முடியாட்சிதான்!

ராவணனே. ராமனே. சேர-சோழ-பாண்டியனே, பாடுபடும் பிரஜைகளின் நலத்தைவிட அரச பரம்பரையினரின் போக வாழ்வையே குறிக்கோளாகக் கொண்ட கோலர்கள்.

வலிய வந்த முடியையும் துறந்து, சகோதர பாசத்தாலும்-மக்கள் பாசத்தாலும் தன்னை அதி உன்னதமான மனிதனுக்கிக் கொண்ட தியாகி "பரதனை", யாரும் 'கடவுள்' என்று வர்ணிக்கவோ—போற்றிப் பூஜிக்கவோ இல்லை! கம்பன் தன் காவிய இலக்கியத்தில் கூட "ஆயிரம் ராமன் சேர்ந்தும் ஒரு பரதனுக்கு இணையாகார்" ┬ என்று சாதித்துப் பார்க்கிருன்! யார் காதிலும் விழுந்ததாகத் தெரியவில்லை! ஆனல் சக்கரவர்த்தி ராமன் 'கடவுள் அவதாரமாகப்' பாடச்சொன்னது உண்மையாகிவிட்டது!

---

* ராகுல்ஜியின் 'வால்காவிலிருந்து கங்கை வரை" நூலில் விளக்கம் காண்க.

┬ தாயுரை கொண்டு தாதை யுதவிய தரணி தன்னைத்
தீவினை யென்ன நீத்துச் சிந்தனை முகத்திற் றேக்கிப்
போயினை யென்றே போழ்து புகழினேய் தன்மை கண்டால்
ஆயிர மிராமர் நின்கே ழாவரோ தெரியி னம்மா!
— ("கம்ப இராமாயணம்" குகப்படலம் 35-வது பாடல்)

இன்றைய முதலாளித்வ சமூகத்தில், பத்திரிகை முதலாளியிடமிருந்து கூலி வாங்கிக்கொண்டு எப்படி ஒரு பிற்போக்கு எழுத்தாளன், வறுமையால் வாடித் தவிக்கும் தமிழ்நாட்டைப் "பொன்னும் மணியும் விளையும் புனிதர் தமிழ்நாடு" என்று வர்ணிக்கிருனே, அதே போல அன்றைய முனிவரும் கவிஞரும் பொருளுக்காகப் பாடிய 'பொய்களும்' 'கடவுள்களும்' உண்மையாகிவிட்டன!

தன் மானத் தமிழன் 'இமயத்தில் கொடி நாட்டிய' கோலாகலத்தை சில தமிழ் மேதாவிகள் வர்ணித்து வாழ்த்தித் திரிவதையே தொழிலாகக் கொண்டிருக்கும் பரிதாபத்தைப் பார்க்கிறோம். அது சரித்திரம், ஆனால் பெருமைப்படக்கூடிய விஷயம் அல்ல, ஏகாதிபத்திய வெறியே அற்ற தமிழனை இந்நாளில் இப்படிக் கூறித்திரிவது இழிவுபடுத்துவதுடன், மறைமுக ஏகாதிபத்திய தாஸர்கள் என்று அவர்களை சந்தேகிக்கவும் தூண்டுகிறது. ஆம்; 'குமரியில் வடவர்' என்றால் நமக்குக் கொதித்தெழத் தோன்றுகிறதல்லவா? ஜனநாயகத்திற்கு விரோதமான ஆதிக்க வெறி கோஷமே, இந்த 'இமயத்தில் நாம்!' நிற்க.

கல்லூரித் தமிழ்ப் பேராசிரியராகிய என் நண்பர் திரு அகஸ்தியலிங்கம் அவர்களிடம், "கம்பன் காவியத்தில் கூறப்பட்டுள்ள ராமன் முடிமன்னர்களில் குறிப்பிடத்தக்க முற்போக்குள்ளவன்தானா?' என வினவினேன். "உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது?" என்றார் பதிலுக்கு அவர். "கம்பர் காவியத்தைப்பொருத்தவரை ராமன் நேர்மையுள்ள அரசனாகத்தோன்றுகிறது' என்றேன். "பிறகு ஏன் உங்களுக்குச் சந்தேகம்?" பிறமொழிகளிலும் ராமாயணத்தைப் பாடியவர்கள் சம்சயத்திற்கு இடம் வைத்திருக்கிறார்கள். சிலர் உண்மையையும் பாடியிருக்கிறார்கள் என்றேன். அடுத்த வாரம் உங்களுக்குப்பதில் சொல்கிறேன் என்றார்.

•

மறுவாரம் குறித்த நேரத்தில் சந்தித்தோம். "போற்றினும் போற்றுவர்; பொருள் கொடாவிடின் தூற்றினும் தூற்றுவர்' என்ற கம்பன் காலத்துச் சோழ மன்னன் புலவர்களைப்பற்றிப் பாடிய கவியைப் பாடி, சில செய்யுள்கள் மூலம் கீழ்க்கண்டவாறு ஆதாரம் காண்பித்தார்: "கம்பன் பொன்னுக்காகவும், ஒளவை கூழுக்காகவும் பாடியதாகக்கூடக் கவிதைச் சரிதை கூறுகிறது. தனிப்பாடல்களைப் பாடிய பல கவிஞர்கள் வாயிலாக ராமனை, "கம்பன் கனவு கண்ட ராமன்" என்று ஆணித்

தரமாகப் பார்க்க முடிகிறது பொன்னுக்கு மட்டுமல்லாமல் இதய திருப்திக்காகவும்-தன் இலக்கியப் பேரறிவுச் செறிவைக் காண்பிக்கும் பொருட்டுந்தான் (தான் சமஸ்கிருத இலக்கியங்களில் படித்தும் கேள்விப்பட்டுமிருந்த வடக்கத்திய மன்னன் ராமனைக் கதாநாயகனாக வைத்து) கற்பனைத் திறனைக் கொட்டிக் கவிதை புனைந்தான் என தாராளமாக நம்பலாம். சாதாரணமாக நாம் 'சாப்பாடு நல்லாயிருந்தது' என்பதை "திவ்யாமிர்தமாயிருந்தது" என்கிறோம், அமிர்தம் அருந்தாதபோதே. நாமே நடைமுறையில் இப்படிச்சொல்கிறோம் ஆனால் கவிஞன் யதார்த்தத்துடன், எதையுமே மிகைப்பட (அதிகக் கற்பனையுடனே) பார்க்கிறான்; பாடுகிறான். இலக்கணமும் இதற்கு இடம் கொடுக்கிறது. ஓரளவே அதில் உண்மை, பெரும் அளவு கற்பனையே" என்று கூறி முடித்தார்.

எனவே, கம்பனது இலட்சிய ராமனும் சரி, குழந்தைக் கவிராயரது இலட்சிய இராவணனும் சரி, அதிவீரராம பாண்டியன்—புகழேந்தியின் இலட்சிய நளனும் சரி, இளங்கோவின் செங்குட்டுவனும் சரி,—அவர்கள் சொந்தக் கற்பனையளவில்—அவர்கள் கனவு கண்ட பாத்திரங்களே, கவிதைச் சுவைக்காக உயர்த்திக் கூறப்பட்ட உண்மைகள்.

பிரிட்டிஷ் பத்திரிகைகள் சர்ச்சிலை 'உலகப் பெரிய மனிதர்' என்று பிரசுரிக்கவில்லையா! ஆனால் உண்மையா இது? உண்மையில் பெரிய மனிதன் பல கோடி மக்கள் துயர் துடைப்பவனே தவிர, சில ஆயிரம் பேரிடம் செல்வாக்குப் பெற்றவனல்ல.

ஆகவே கவிஞர்—'கலைஞரது' கற்பனை முடி மன்னர்கள் நமக்குத் தேவை இல்லை. யதார்த்த பிரத்தியக்ஷ முடி மன்னர்களே நம் வாதத்திற்குத் தேவை. இந்த நிஜ மன்னர்கள் சந்தேகமற விஷம் போன்ற கொடியவர்களே 'பிரஜைகளாகப் பிறந்த அத்தனைபேரும் வறுமையற்று—கல்வி கற்று—கலையறிவு பெற்று அவர்களது பிரதிநிதித்வத்துடன் அரசு புரிய வேண்டும்.'—என்ற அம்ஸமே முடியாட்சியில் துளியும் கிடையாது. அதற்குப் பதிலாக, மாட மாளிகைகளும், கூட கோபுரங்களும், கலை, கவிதைகளும், சித்திரமும் சிற்பமும், சங்கீதமும் நடனமும் அரண்மனைக்குள் மட்டும் அரசர்க்கும், மந்திரிகள்—தளபதிகள்—குருக்கள்—கவிஞர்க்கு மட்டும் அனுபவிக்கக் கிடைக்கக்கூடிய ஏகபோக சாதனமாக வைத்துக்கொண்ட

வஞ்சகர்கள். பொது மக்களின் வரிப் பணமே அவர்களுக்குக் குறியே தவிர, வாழ்க்கை வளம் குறியல்ல. இத்யாதி இன்பங்களைக் குடிமக்கள் நினைத்துப் பார்க்கக்கூட முடியாது!

இந்த உண்மைகள் இப்படி இருக்க, திராவிட இயக்கத்தினர் வக்காலத்தைப் பாருங்கள், :'பவநகர் ராஜாவுக்கு மட்டும் கவர்னர் பதவி ஏன்? புதுக்கோட்டை மஹாராஜாவுக்கு எதுவும் இல்லாதது ஏன்? வடக்கத்திய சமஸ்தானங்களை எல்லையுடன் அனுமதிப்பது ஏன்? தென்னாட்டு சமஸ்தானத்தை எல்லையின்றி இணைப்பது ஏன்?''—முடிதாங்கிகளுக்காக அடிதாங்க வரும் இயக்கத்தாரின் அறியாமையை வெளியிடாமலிருக்க முடியவில்லை! 537க்கு மேற்பட்ட 'மில்லினர்-பாட்டாளி மக்களான' 'இஸ்பேட்' மன்னர்களுக்கு, மறைந்த பட்டேலும், கோ. ஐயங்காரும் நஷ்ட ஈடு உத்திரவாதம் அளித்தது போதாதென்று ராஜாஜி 'கிரிமினலில்' கூட ஷெயார்க்கு சட்டம் மூலம் சலுகை தருகிறார்!

ஆம்; காங்கிரஸ்காரரும் ஜன சமூகத்தின் காலடியில் கிடக்கும் பிச்சைக்காரர் பிரச்னையை முதலில் எடுக்காமல்—முடி மன்னர் பிரச்னையை முதலாவதாகக் கொள்கின்றனர். திராவிடத்தாரும்—சமூகத்தின் அடித்தளத்தில் அல்லலுற்று வேலையில்லாமல் திண்டாடித் தெருவில் நிற்கும் பாமரன் பிரச்னையை முதலில் கொள்ளாமல், பகட்டு மன்னர்க்குப் பரிந்து பேச முன் வருகின்றனர். இந்த சாராருக்கும் பாடுபடும் பாட்டாளிகளுக்கும் என்றுமே சம்பந்தம் இருந்ததில்லை! இருப்பதுமில்லை!

ஆகவே, முடியாட்சியை வர்ணிப்பவர்களைக் 'கலைஞர்கள்' என்றோ-வக்காலத்து வாங்குபவர்களைச் 'சீர்திருத்தவாதிகள்' என்றோ நாம் கூற முடியாது. முடிதாங்கிகளின் அடிதாங்கிகளைப் "பொது ஜன விரோதிகள்" என்று தாராளமாகச் சொல்லலாம்.

★

2

அரசியலில் மத விஷம்!

“மதம் ஒரு அபின்”—லெனின்.

போதைக்கு ஒப்பிடுகிருன் கர்ம வீரன் லெனின், மதத்தை! நம் உள்நாட்டு அமைச்சர் ராஜாஜியிலிருந்து, சீர்திருத்தவாதி அண்ணு வரையிலும் இந்தப் போதை ஆட்டிவைக்கிறதென்ருல் அதிகம் கேட்பானேன்?

காந்தீயமே அரசியலுக்கு விரோதமானது: அதில் பாதிக்கு மேல் மதக்கலப்பு இருக்கிறது, காந்திஜி சாகும் வரை ‘ஹிந்து—முஸ்லீம் ஒற்றுமையைக்’ காணுமலேயே தான் மறைந்தார். மதம் கலந்த அரசியல் தத்துவத்தில் அவர் கனவு சிதைந்தது.

இஸ்லாமியப் பெரும் முதலாளி இஸ்பஹானியும், இந்தியப் பெரும் முதலாளி டால்மியாவும் அழகாக—அருமையாக—ஒப்பந்தங்கள் செய்துகொண்டு, ஒய்யாரமாக விருந்துண்டு ஒற்றுமையாக இருக்கும்பொழுது,—முஸ்லீம் பாமரனும், ஹிந்து பாமரனும் வெட்டிக் குத்திக்கொண்டு இரத்த வெறியில் மடிவானேன்? இங்குதான் இருக்கிறது ரகசியம்! அங்கு—முதலாளித்வத்தில்—ஒற்றுமை இருக்கிறது. லாபத்திற்காக—மூலதனச் சுரண்டலுக்காக ஒன்று கூடுகிறது. அவர்களுக்கு மதம் வேண்டாம், அன்பு வேண்டாம், ஆச்சாரம் வேண்டாம்! பணம் மட்டும் வேண்டும்! அதற்காகக் கூட்டணி அமைக்கிறது.

‘பாக்’ பிரதமர் மனைவியான பீகம் லியாகத் அலியும், மதகுரு ஆகாகானின் மனைவியும் ‘கோஷா’வை அநாகரீகம் என்று கருதி அணிவதில்லை. ஆனல் ஊருக்கு உபதேசம். “கோஷாவே இஸ்லாமியப் பெண்டிர் தர்மம்” என்பது! எளியோர் மட்டும் அநாகரீகத்தைக் கடைப்பிடிக்க வேண்டியவர் போலும்!

"மனித ஜாதியே 'கோ' மாதாவைப் போற்றிப் பூஜிக்க வேண்டும்'' என்பது டால்மியாவின் தத்துவம். ஆனால், அவர் ஆடை அணி இமைளிப்பது 'ஹிந்து அகதிகளுக்கு' மட்டுமே! மனித ஜாதியின் மேல் அக்கரை கொண்ட இந்த மாபெரும் மனிதர், மறு நிமிஷமே மாட்டைப் பார்க்கிலும் மனிதனைக் கேவலமாக்கியதைக் காண்கிறோம்!

"ராம ராஜ்யமே எங்கள் கனவு'' என்று மறைந்த காந்திஜியும், பட்டேலும், தற்போதைய ராஜாஜியும் கூறிய கூற்றாகும். "இஸ்லாமியமே எங்கள் இலட்சியம்'' என்று லியாகத் 'பாக்'கில் கூறுகிறார். "மதக் கலப்பற்ற அரசு'' என்று இரண்டையும் நம்புவதற்கில்லை. இங்கே ஹிந்து வாடையும், அங்கே முஸல்மான் வாடையும் நாறத்தான் செய்கிறது!

இரு நாட்டு முதலாளிகளும் சரி, இரு நாட்டு முதலாளித்வ அரசுகளும் சரி, இரு நாட்டுப் பாட்டாளி வர்க்கமும் ஒன்று கூடுவதை அந்தரங்கத்தில் விரும்பவில்லை. ஆம்; அந்த உழைப்பாளர் சக்தி ஒன்று கூடிவிட்டால், தாங்கள் உயிர்வாழ முடியாது என்பது இரு தரப்பு முதலாளிகளும், அரசுகளும் நன்கு உணர்ந்துதான் இருக்கின்றன. நபிகளின் பேரால் அவர் காட்டிய 'வழியும்,' கண்ணனின் பேரால் இவர் காட்டிய 'வழி'யும் பாமரன் மீதுதான் முட்டி மோதி இரத்த ஆறு பெருகி ஓடச் செய்கிறது! இதற்கு மறைமுக ஆதரவளிக்கிறது இரு தரப்பு முதலாளி வர்க்கமும்! ஏன்? அந்த சக்தி—'உழைப்புரிமை' கோரி தங்கள் மீது போர் தொடுக்காமல் தடுக்கவே, அதன் கவனத்தையும் செயலையும் வேறு திக்கிற்குத் திருப்புகிறது.

உழைக்கும் வர்க்கம் (முதலாளிகளைப் போல) "வர்க்க ஒற்றுமை'' பெற்றுவிட்டால், வயிற்றுப் போரைத் துவக்கிவிட்டால்—முதலாளித்வம் மாண்டு மறைந்துவிடும். லக்ஷோப லக்ஷம் உழைப்பாளிகளின் இரத்தம் வீணே தெருவில் ஓடாது! இந்த உண்மையை ஆதரிக்க காந்திஜியும்—ஏன், அரசியலாருமே மறுத்தனர். அதனால்தான் இந்த 'வகுப்பு வேற்றுமைப்' பிரச்னைக்கு அவர்களால் முடிவு காண முடியவில்லை. படுதோல்வி யுற்றனர்!

முன்னைய பிரபுத்வ முடியாட்சியைப் போலவே, இன்றைய நாஸ்திக பிரசாரக் கூட்டத்தையும் முதலாளித்வ ஆட்சியும் மதத்தையும், மதப்பூசாரிகளையும் தட்டிக் கொடுத்து வளர்த்து வருகிறது. உழைக்கும் வர்க்கத்தை, "ஆசையை அடக்கிக் கொள்" என்று உபதேசிக்கிறது!

பொறுப்பான அமைச்சர் ஒருவர் 1950 அக்டோபரில், சென்னை திருவெற்றியூர் தீப்பெட்டித் தொழிற்சாலை ஒன்றின் கட்டிடத் திறப்பு விழாவில், முதலாளிகள் கொடுத்த தங்கக் கத்தரிக்கோல் ஒன்றைப் பரிசு பெற்றுக்கொண்டு பேசிய பேச்சைப் பாருங்கள்: "முதலாளிகளும் தொழிலாளிகளும் கணவனும் மனைவியும் போன்றவர்கள். ஒருவருக் கொருவர் பிணங்கிப் பிளவு ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது. தொழிலாளர் 'ஸ்ட்ரைக்' என்ற பேச்சே பேசக் கூடாது. பணம் இன்று வரும்; நாளை போகும். அது நாமாகத் தேடிக் கிடைக்கக்கூடியதல்ல, பகவானைப் பார்த்துக் கொடுக்கக் கூடியது. முதலாளிகளுடன் ஒற்றுமையாக இருந்து உழையுங்கள்..."

இந்த முதலாளித்வசமுதாயத்தில் மனைவி, கணவனுக்கு அடிமைபோல் கருதப்பட்டு நடத்தப்படுகிறார்கள். அது போலவே தொழிலாளி, முதலாளிக்கு அடிமையாகஇருந்து உழைத்துப் போடுவது மட்டுந்தான் கடமையா? மனைவி கூட குறைந்த பக்ஷம் ஒரு நூல் புடவைக்காகப் புருஷனிடம் 'புரட்சி' பண்ணுகிறாள். ஆனால் தொழிலாளிக்கு அந்த உரிமை கூடாது என்று அதே பிரசங்கத்தில் மறுக்கிறாரே!

இந்த முரணானசொற்பொழிவை மேலும்அலசுவோம். பணம் பகவானைப் பார்த்துத் தருவதுதானா? பண்டித நேருவைவிட, பகவானைப் பார்த்துத்தான் மந்திரி பதவியையும்—அபரிமிதமான சம்பளப் பணத்தையும் கொடுத்துதவுகிறார் என அவர் நம்புகிறாரா? அப்படியானால் இந்தப் பணம் அவரது சென்ற கால உழைப்பால் உயர்த்தப்பட்டுக் கிடைக்கிறது என்பதை உணர மறுக்கிறாரா?

இருக்கட்டும்; பொருளாதாரத்தைப் புரிந்து கொண்டாவது பேசியிருக்கிறாரா? மூலதனத்தை (பணத்தை) உற்

பத்தி செய்வது பகவான்தானு? மூலதனம் எப்படி உற்பத்தி ஆகிறது?

உற்பத்தி சாதனங்களுடன் (Machineries), மூலப் பொருள்களும் (Raw–Meterials), உழைப்புச் சக்தியும் (Man power) மோதி, உற்பத்திப் பொருட்களும் (Production) மூலதனமும் (Capital) பெருகுகிறது. எல்லாம் இருந்தும், உழைப்பு சக்தி இல்லையேல் உற்பத்தி இல்லை, உற்பத்தி இல்லையேல் மூலதனமும் இல்லை. ஆகவே, 'உழைப்பு சக்திதான் பணத்தைப் பெருக்குகிறது' என்ற இந்தச் சிறிய பொருளாதார உண்மையை அவர் உணரவில்லை, அல்லது உணர்ந்தும் மறைக்கிருர்.

'கல்கி'யார் அரசியலில் மதச் சேற்றைக் குழப்புவதில் ஒரு படி உயரப் போய்விட்டார். உதாரணமாக:

1950 நவம்பர் இதழ் ஒன்றில், "சென்னையில் வெள்ளம்" என்ற தலைப்பில் எழுதுகிருர். "அஸ்ஸாமில் பூகம்பத்தால் ஏற்பட்ட வெள்ளத்தைப் படித்தவர்கள், இந்தத் தலைப்பைப் பார்த்தவுடன் ஆச்சரியப்படுவார்கள். தென்னுட்டில் சமீப காலமாக ஆஸ்தீகத்தையும் ஆத்மார்த்தத்தையும் எதிர்த்து நாஸ்தீக வாதப் பிரச்சாரம் வலுத்து வருகிறது. ஆனல் ஸ்வாமி சிவானந்தரின் சென்னை விஜயம் நகர் எங்கும் ஆஸ்தீக வெள்ளத்தில் ஆழ்த்திவிட்டது. ஸ்வாமிஜிக்குப் பண முடிப்பளித்து ஆகாராதி தங்கும் வசதிகள் செய்து உபசரித்து அனுப்பியதிலிருந்து சென்னை மக்களின் பக்தி வெளியாயிற்று......"

துறவியாம்! ஆனல் பண முடிப்பு வேண்டுமாம்!! துறவியாம் ஆனல் வசதிகளும் உபசரிப்பும் வேண்டுமாம்!! துறவியாம்! ஆனல் ஆங்கில—தமிழ்ப் பத்திரிகை விளம்பரங்க ளெல்லாம் வேண்டுமாம்!! அஸ்ஸாம் வெள்ளத்திற்கும்—சென்னை 'வெள்ளத்திற்கும்' உபமானம்! முதலில் தலைப்பைப் பார்த்தவுடன் நான்கூட மிரண்டேன். ஒருக்கால் 'கீழ்ப்பாக்கத்துக்கு' மட்டும் அந்த வெள்ளம் கரை புரண்டு ஓடி "கல்கி" இகழ்களை எல்லாம் நனைத்து நாசமாக்கியிருக்கக்கூடும் எனத்தெளிந்தேன். பொதுமக்கள் பணத்தை

ஏய்த்து வாங்கி, ஒரு தனிப்பட்ட சாமியாருக்கு அள்ளிக் கொடுப்பதில், அறிவுத் துறையில் தொண்டு செய்யும் பத்திரிகை ஆசிரியரின் அக்கரையைப் பார்த்தீர்களா?

இல்லாவிடில் ஆறு அவுன்ஸ் அரிசிக்கும் அவலமாகத்துடிக்கும்—ஏன், உற்பத்தி கேந்திரமான கிராமங்களில் 2-அவுன்ஸ் அரிசிகூட உற்பத்தியாளர்களே பெற முடியாமல் பசிக்கொடுமையால் தவிக்கும் மக்களின்—ஜீவாதாரப் பிரச்னையை விட்டுவிட்டு, இப்படிப் பிதற்றித் திரியுமா? நீரின்றி நிலமின்றி கருகிக் காய்ந்து வறுமையால் நலிந்து மடியும் நம் விவசாயத் தமிழ் நாட்டை, தன் அஜீரணப் புளிச்ச ஏப்பத்தால், "நீர் வளமும் நில வளமும் செறிந்த செந்தமிழ்ப் பொன்னாடு" என்று பொய்ப் புனை பாடுமா?

திராவிடர் அண்ணாத்துரையார் கூற்று இதற்கு எள்ளளவும் இளைத்ததல்ல, 1950 முழுக்க—குட்டிக் கழகம் பிறந்தது முதல், "நாங்கள் கடவுள் இல்லை என்று சொல்லவில்லை. ஆண்டவன் அருகே அழகிகள் இருவர் எதற்கு என்றுதான் கேட்கிறோம். நாங்கள் பகவான் இல்லை என்று சொல்லவில்லை. பக்கத்தில் ஏன் பத்தினிமார் இருவர் என்றுதான் கேட்கிறோம்"—("மாலைமணி") என்று முழங்கி வருகிறார்.

மறுமுறை ஒருதரம் பாருங்கள். இரு வாக்கியங்களுக்கும் பொருள் ஒன்றே. பேச்சாளரின் லக்ஷணம் இது!

"கடவுள் என்பது கற்பனைப் பெயர்..."—(பழைய "விடுதலை"கள்) என்று முன்பு பெரியாருடன் சேர்ந்து முழங்கினார்! பின்னால் புதுக் கழகத்தைக் கட்டி வளர்ப்பதற்காக, காலிகளின் கல்லெறிகளுக்குப் பயந்து—முன்னே கூறியபடி 'பல்டி'யடித்துவிட்டார்! முதலில் தெளியாத புத்தி, அறிவு வளர்ச்சிக்குப் பின் தெளியும் என்பது அனுபவம். ஆனால் பளிங்குக்கல் வீட்டைப் பார்த்த அண்ணா, இப்பொழுது 'குப்பைத் தொட்டியை' மோஹிப்பதன் காரணம் நமக்குப் புரியவில்லை!

"ஸ்ட்ரைக்" குறித்து அவர் கருத்தை (1948 திருச்சி சொற்பொழிவு) பாருங்கள்: "ஸ்ட்ரைக் ஆரிய சூழ்ச்சி, தென்னாட்டில் அந்தப் பேச்சு கூடாது"—இந்தப் பேச்சு எதைச் சேர்ந்தது? தென்னாட்டு முதலாளிகளுக்கு உழைத்துப் போடுவது யார்? தென்னாட்டு பாட்டாளிகள் தானே! தென்னாட்டு முதலாளிகள் 'மாம்பலங்களிலும்' 'காந்தி நகர்' களிலும் 'சொக்கி குளங்களிலும்' 'ஊட்டி' களிலும் வாழலாம்; அவர்களுக்கு உழைத்துப் போடும் பாட்டாளிகள் மட்டும் மண் புழுதியில் புரள லாமாக்கும்? தென்னாட்டுப் பாட்டாளிகள் உழைப்பை தெற்கத்திய முதலாளிகள் எவ்வளவு வேண்டுமானாலும் சுரண்டலாம் என்பதுதான் கழகக் கொள்கையா?

ராஜாஜி "கடவுள் பார்த்து பணம் கொடுப்பார்" என்கிறார்! அண்ணா, "தொழில் வளம் பெருகிய பின் உழைப்பவர் வயிறாரச் சாப்பிட்டுக் கொள்ளலாம்; அது வரை முதலாளிகள் மட்டும் உண்டு கொழுக்கட்டும்" என்கிறார்! இரண்டும், இடத்தையும் வலத்தையுந்தான் போலும்!

ஆனால் நாம் சொல்கிறோம், இன்று மக்கள் பிரச்னை 'கடவுள்' அல்ல; 'வயிற்றுப் பிரச்னை'தான். முதல் ஜீவா தாரப் பிரச்னை என்று!

எல்லோருக்கும் வேலை, உணவு–உடை–உறைவிடம், ஓய்வு தேடிக்கொடுத்து, வாழ்வை சுபிட்ச மயமாக்கிவிட்டால் மனத்தே கவலைக்கு இடமில்லை! பிறகு கடவுளுக்கும் இடமில்லை! ஆம்; துயர் துடைக்கப்பட்ட சமுதாயத்தில் போற்றுவாரின்றிப் பூஜிப்பாரின்றி 'கடவுள்கள்' இத்துச் செத்து மடிந்து இருந்த இடம் தெரியாமல் போவர்!

3

"சமுக விடுதலை" கோஷம்!

கள்ளமார்கட்காரரிடம் சிக்கிய காங்கிரஸ் கறுப்பு முதலாளித்வமும் சரி, தென்னாட்டுத் திராவிட முதலாளித்

வரும் சரி, ஒரே குரலில் "சமூக விடுதலை" வேண்டும் என்று கோஷிக்கிறது!

தாழ்த்தப்பட்டவர்களுக்கு "ஹரிஜனங்கள்" என்ற பெயரைக் கொடுத்தாலே பாதி சமூக விடுதலை கிடைத்து விட்டதாகக் காங்கிரஸ் பிரமுகர்களும், தொண்டர்களும் கருதுகின்றனர்.

காமத்தைக் கக்கி எழுப்பும் சிற்பச் சிலை மயமான ஆலயங்களை அவர்களுக்குத் திறந்து விட்டாலே 'சமூகம் உயர்ந்து விட்டது' என்று அவர்கள் நம்புகின்றனர். மிகச் சில படித்த தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குச் சர்க்கார் உத்யோகம் கிடைத்தவுடன் ஆத்ம திருப்தி அடைந்துவிடுகின்றனர்!

'ஹரியே' இல்லாதபோது ஹரிஜனங்கள் எங்கிருந்து முளைக்க முடியும்? ஒரு வகுப்பினரை மனிதஜாதியிலிருந்து தனியே "ஹரிஜனங்கள்" என்று பிரித்து வைப்பதே இழிவான செயலாகும். 'பறையன்–சக்கிலியன்' என்ற பெயருக்கு மாற்றுப்பெயர் கொடுத்து மேலும் அவமானப்படுத்துவதாகும். தாழ்த்தப்பட்டோர் உயர்வை, அவர்கள் வாழ்க்கைத்தரம் ஒன்றைவைத்துத்தான் கணிக்கவேண்டும்.

இன்றும் நகரங்களில் நகர சுத்தித் தொழிலாளர்கள் வீட்டிலே சமையலுக்குச் சில சமயம் எதுவுமில்லாமல்—பொது மக்கள் வீடுகளில் பழையது கேட்டு வாங்கி உண்ணும் பரிதாப நிலையைப் பார்க்கிறோம். அவர்களுக்குத் தனிச் சேரிகள் ஒதுக்கிப் படு பாதாளத்திற்குத் தள்ளுகிறோம். அவர்களது ஓட்டைக் குடில்களையோ—சேறு படிந்த தெருக்களையோ—விளக்கில்லாத வீதிகளையோ—சுகாதாரக் குறைவான பள்ளமான இடங்களையோ—சர்க்காரும் சரி, ஸ்தல ஸ்தாபனங்களும் சரி, சீர்திருத்த வாதிகளும் சரி,—அறவே மறந்து விடுகின்றனர். பொது மேடையில் பேசப்படும் 'புரட்சி,' செயலில் இல்லவே இல்லை!

கிராமங்களிலோ இவர்கள் கேவல நிலையைக் கேட்கவே வேண்டாம். அந்தணர் வாழ் அக்ரஹாரப் பக்கம், தாழ்த்தப் பட்டோர் தெருவிலேயே நடந்துபோக உரிமை

இல்லை! ஆயிரக் கணக்கான கிராமங்களில் இன்றும் பார்க்கலாம். ஆதித் திராவிடர் உழுது பயிரிடும் நெல்—தானியங்கள் உதவுமாம்! ஆனால் அதை விளைவித்த அவர்கள் வாசலுக்கே வரக்கூடாது!! காந்தீயத்தை அமுல் நடத்தும் காங்கிரஸ் ஆட்சியில்தான் இத்தனை அக்கிரமமும்!

மேலும் அவர்கள் முன் பிராமணர் மட்டுமல்ல; எல்லா ஜாதியினரும் 'உயர் ஜாதி'யினர் என்று சொல்லிக் கொள்வதை இந்த சர்க்கார் அனுமதிக்கிறது!

"சமூக விடுதலையையே" கோஷமாகக் கொண்ட திராவிடர்கள் முதலில் சமூகத்தின் அடித்தளத்திலிருக்கும் ஆதி திராவிடர்களைப்பற்றி அதிகம் சிந்திப்பதில்லை. அவர்களது 'ஆதி' என்ற பதத்திற்கு அர்த்தமில்லாமல் செய்ய முயன்றதில்லை; முடியவில்லை! தங்கள் இயக்க விதிகளில் "கட்டாயக்கலப்பு மணம்" போன்ற புரட்சிகரமான கொள்கைக்கு முக்கியத்வம் அளித்திருக்கிறார்களா? அதுவுமில்லை!

ஆடு மாடு இறங்குவதற்குக் கூட கிராமக் குளங்களில் அனுமதி உண்டு. ஆனால் தாழ்த்தப்பட்டோர் அதன் தண்ணீரைத் தம் கரத்தால் தொடக்கூட உரிமை இல்லை! செருப்புத் தையல் தொழிலாளியையும், க்ஷவர—சலவைத் தொழிலாளிகளையும், பிராமணர்—பிராமணரல்லாத இரு சாராரும் சமத்வமின்றி இறுமாப்புடன் இழிவாக நடத்துவதை இந்த 20ம் நூற்றாண்டிலும் பார்க்கிறோம். இதற்கு உறுதுணையான ஜாதீயத்தையும்—சாஸ்திரத்தையும் சட்டத்தின் மூலம் அனுமதிக்கும் அக்கிரமத்தையும் இந்நாட்டு அரசியலில்தான் பார்க்கிறோம்.

கழகத் தலைமைக் குழுவினரில் ஒருவரான தோழர், நெடுஞ்செழியன், சமீபத்தில் தம் சுயஜாதியில்தான் மணம் முடித்திருக்கிறார். இதன் பொருள் என்ன? 'செயல்' என்றால் ஒரே ஓட்டம்! இதுதான் தலைமை ஊழியருக்குக் காட்டும் வழியா? பிறகு இதே குழுவினர், "அந்தணர்களே, உங்கள் ஆரணங்குகளை எங்கள் காளையர்க்குக் கட்டிக் கொடுங்கள்" என்று கூற என்ன யோக்யதை இருக்கிறது? நீவிர் உங்கள் பெண்களை தாழ்த்தப்பட்ட வாலிபருக்கு

மணம் முடித்துச் செயலாற்றிக் காண்பிப்பதல்லவா உயர் வழி?

நாம் சொல்கிறோம், உண்மையான சமூக விடுதலை—"பொருளாதார விடுதலையே"—என்று.

ஒரு உதாரணத்துடன் இதைப் பார்ப்போம். கிராமத்திலுள்ள 'சக்கிலியன்' வீட்டுப் பிள்ளை ஒருவன், மற்றவரைப்போல் தானும் இருக்க ஆவல் கொண்டு, கள்ள ரயில் ஏறி, நகருக்கு வந்து, 'பெரிய மனிதர்களின் கை கால்களைப் பிடித்து, கலாசாலை, கல்லூரிகளில் படித்துப் பட்டம் பெற்று, பிரயாசையுடன் கலெக்டர் ஆகி, உயர்ந்த சம்பளமும், காரும், பங்களாவும் பெறுகிறான் என்று வைத்துக் கொள்வோம்.

நகரில் ஒரு பெரிய ஐயர் ஹோட்டலில் ரகசியமாக இருக்கும் ஒரு ஐம்பது மூட்டை 'அமைத்து' அரிசி கண்டு பிடிக்கப்படுகிறது என்றும் ஐயரைக் கைது செய்யவும், ஹோட்டலை 'ஸீல்' வைத்து மூடவும் கலெக்டர் உத்தர விடுகிறார் என்றும் வைத்துக்கொள்வோம். ஐயர் கோபம் கொண்டு, "நீ யாருடா சக்கிலியப் பயல்மகன் என்னைக் கைது செய்யச் சொல்ல?" என்று கொதித்தெழ முடியுமா? முயன்றால் நடக்குமா? எப்படி இங்கே சக்கிலியன் உயர்ந்தான்? பொருளாதார அந்தஸ்துதான் அவனை பிராமணனைப் பார்க்கிலும் உயர்த்தியது! உயர்ந்த சம்பளமும், படிப்பும், அதிகாரமும், காரும், பங்களாவும் அப்படி அனாயாசமாக உயர்த்தியது!

ஆனால் கிராமத்திலுள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பு உபாத்தியாயரிடம் கிராமத்து காப்பிகிளப் ஐயர் எப்படி நடந்து கொள்கிறார்? உள்ளே வரவழைத்துத் தரையில் உட்கார வைத்தாவது சாப்பாடு போடுகிறார். அதே சமயம் படிப்பில்லாத பறையனை, வீதியிலேயே—வெளியே வைத்துத்தான் சாப்பாடு போடுகிறார்!

தவிர, பிராமண தாசில்தார், தாழ்த்தப்பட்ட வகுப்பு கலெக்டரை தம் வீட்டுக்கு அழைத்தே விருந்து செய்வதையும் பார்க்கிறோம். இங்கே வர்ணாஸ்ரமம் இல்லை!

ஜாதி இல்லை! சமயம் இல்லை! பொருளாதார அந்தஸ்து உயர்ந்தால் அவை எல்லாம் வெறும் போலிகளாகி விடுகின்றன !

மற்ெருரு உதாரணத்தையும் கவனிப்போம்.

டி. வி. எஸ். பஸ் முதலாளிகள் வீட்டில் பெரிய ஆச்சாரத்துடன்தான் இருக்கிருர்கள். ஆனுல் அவரது 'பஸ்ஸில்' ஐயங்கார் பிரயாணி அருகே பறையன் அமர்ந்தால், "தூரப் போடா" என்ருே, "பிராமணுளுக்கு மட்டும்" என்ருே, கூறமுடியுமா? கூறினுல் அவர் லாபம் என்னகதி ஆவது?

அந்தஸ்து உயர்ந்த அம்பேத்காரை அந்தணமாது (லேடி டாக்டர்) தங்கு தடையின்றி மணம் புரிந்து கொள்ளவில்லையா?

ஆகவே, வர்ணுஸ்ரமமும்சரி, ஜாதீயமும்சரி,—பொருளாதாரத்தின் (பணத்தின்) முன்னுல் சரிந்து தவிடு பொடி ஆகிவிடும்!

எனவே, "பொருளாதார சமத்வத்தில் — சமூகம் தானே சமத்வம் அடைகிறது" என்ற உண்மை இதிலிருந்து சுலபமாகப் புலனுகும்.

4

(அ) வகுப்புவாதம் வளர்ந்தது ஏன்?

வட நாட்டில் ஹிந்து முஸ்லீம் வகுப்பு வேற்றுமை தீவிரமாக வளர்ந்ததற்குத் தொன்றுதொட்டு இருந்துவரும் ஒரு காரணம் இன்றும் இருந்து வருகிறது.

அதாவது அங்கே ஹிந்து ஆண் பெண்கள், பசுக்களை, 'கோ மாதா' என்று போற்றிப் பூஜித்து, அதன் கோமியத்தைக்கூட தலையிலும் கண்களிலும் ஒற்றி வணங்குகின்றனர், ஆனுல் முஸ்லிமான்கள் அதே பசுவின் மாமிசத்தை

11214

முக்கிய இறைச்சி உணவாக உட்கொள்ளுகின்றனர். புலால் உண்போரைத் தீவிர ஹிந்துக்கள் இழிவாகப் பேசுகின்றனர்.

மற்றொன்று தென்னாட்டைப்பார்க்கிலுங்கூட அங்கே ஜாதீய வர்ணாஸ்ரம ஆச்சாரம் அதிகம். தாழ்த்தப்பட்டோர் விஷயத்தில் தீண்டாமை மிகமிகக் கடுமையாக அனுசரிக்கப் படுகிறது. சாதாரண ஏழை ஹிந்துக்களையுங்கூட. உயர் வகுப்பார் பிச்சைக்காரர்களைப்போலக் கேவலமாகக் கருதி நடத்துகின்றனர்.

ஆறு, குளம், கோவில், கலாசாலை போன்ற பொது இடங்களில் தாழ்த்தப்பட்டோரையும், ஏழை பாமர ஹிந்துக்களையும் உயர் வகுப்பார் அருவெறுப்புக் காண்பித்து விரட்டி அடிக்கின்றனர். தாழ்த்தப்பட்ட வாலிபனும் பெண்ணும் கல்யாணம் செய்துகொள்வதற்குக்கூட ஆதிகால அடிமைபோல எஜமானது உத்தரவுக்கும், பணத்திற்கும் ஏங்கிக் கிடக்க வேண்டியிருக்கிறது.

எந்த ஜாதியினராவது ஹிந்து ஆச்சாரத்திலிருந்து சிறிதளவு மாறினலும், ஜாதி—ஊரைவிட்டே தள்ளிவைத்து—மிகக் கடுமையாக தண்டிக்கின்றனர்!

இதனல்தான் வட இந்திய தீவிர ஹிந்துக்களால் ஹிம்ஸிக்கப்படும், சாதாரண ஹிந்துக்களும், தாழ்த்தப்பட்டோர்களும், முஸ்லீம் மதத்துக்குள் ஓடி ஒளிந்து ஓரளவு விடுதலை பெறுகின்றனர். கூடியவரை முஸல்மான்கள் பெண் கொடுப்பது எடுப்பதுவரை சமத்வமாக நடத்துகின்றனர். இதனல் வடக்கே ஹிந்து ஜனத்தொகை குறைவதும், முஸ்லீம் ஜனத்தொகை பெருகுவதும் பிரத்தியக்ஷ அனுபவ உண்மையாகும்.

இங்கே தென்னாட்டில் வகுப்புவாதம் வளர்ந்த கதையைப் பாரபக்ஷமின்றி வெளியிட்டால், சிலருக்குக் கசப்பாக இருக்கலாம்! ஆனல் அப்பழுக்கில்லாத ஆணித்தரமான உண்மைகளை, அலக்ஷியமாக மழுப்பிவிட்டால், அதே வகுப்புவாத விஷம் கொல்லும் அளவுக்கு வளருமேதவிரக் குறையாது. ஆம்; பிராமணர்களது தனித்தியங்கும் தன்

மையால்தான் தென்னாட்டில் பிறந்த வகுப்புவாத விஷம், குழந்தைக் கோலத்திலிருந்து இங்கே குமரன்உருவெடுத்து சாகும் பருவமெய்தாமல் சண்டித்தனம் செய்து கொண்டிருக்கிறது.

நிழலிலிருந்தே பிழைப்பதற்கான வழிகளில் மட்டுமே தென்னாட்டு பிராமணர்கள் குறிப்பாக ஈடுபட்டனர். தொன்றுதொட்டு இருந்துவரும் கோவில் குளத்து நிர்வாகங்கள், சர்க்காரில் நடுத்தர உயர்தர உத்யோகங்கள், வக்கீல், டாக்டர், புரபஸர், உபாத்தியாயர், குமாஸ்தா, பத்திரிகைத் தொழில், சங்கீதம், ஜோதிட சாஸ்திர ஆச்சாரத் தொழில்கள், ஹோட்டல்கள், நிலச்சுவான்தார்கள்—போன்ற அதிக உடலுழைப்பே இல்லாத தொழில்களைக் கைப்பற்றி வாழ்ந்து வந்ததுடன், தம் இனத்தவரையும் பிற கஷ்டப்படும் தொழில்களில் ஈடுபடுத்தாமல் தம்மவரையே தம் காரியாலயங்களுக்கு இழுத்து இணைத்து, சர்க்கார் சலுகையும் பெற்று, தனித்து சுக வாழ்வு வாழ்ந்து வரலாயினர்.

குடியிருப்பு இடங்களிலும் அப்படியே கூட்டம் கூட்டமாக அக்ரஹாரம் என்ற பெயரில் பகிரங்கமாகவும், ஒரு தெருவையோ அல்லது ஒரு பிரதேசத்தையோ சுய ஜாதியினருக்கு மட்டும் அனுமதித்து வாழ்ந்து வரலாயினர்.

உடலால் உழைக்கக்கூடிய விவசாய வேலைகளிலோ—ஆலை இயந்திர வேலைகளிலோ—பட்டாளத்து ஸோல்ஜர், போலீஸ் போன்ற முரட்டு வேலைகளிலோ ஈடுபட மறுத்தனர். மற்றும் கைவண்டி இழுத்தல், கல் உடைத்தல், காட்டில் மரம் வெட்டுதல், ரோடு போடுதல், மாடு மேய்த்தல், புல்கட்டு சுமத்தல்—இது போன்ற எந்த உடலுழைப்பு வேலைகளிலும் ஈடுபடாதது மட்டுமல்ல, ஈடுபட்டோரை முதலாளிகளைப் போலவே—ஜாதீயத்தின் பெயரால் அலக்ஷியமாகப் பேசியும் நடத்தியும் வந்தனர்; வருகின்றனர்.

கிராமாந்தரங்களில் தங்கள் வகுப்பாரைத் தவிர இதர எல்லா வகுப்பாரையும் தீண்டாதார்களாகவே கருதி

நடத்தினர். எந்தச் சிறிய சமூக சீர்திருத்தத்தையும் எந்த ஜாதியினர் செய்தாலும் தீவிரமாக எதிர்த்து வந்தனர். தங்களுக்குச் சாதகமாக சர்க்காரிடம் சட்டம் மூலம் சலுகை கோரவும்–பெறவும் செய்தனர். கல்யாணம், சவச்சடங்கு முதலியவற்றைப் பெரும்பாலும் தங்கள் இனத்தவருடன் மட்டுமே வைத்து வந்தனர்.

"ஜாதீயம் தொழிலுக்குத் தக்கதான முன்னோர் ஸ்ருஷ்டி. இருந்தே தீரவேண்டும்" என்று படித்தவரும், அரைகுறைகளும் ஒரே குரலில் ஆதரித்து வற்புறுத்தி வந்தனர். கடவுளின் பெயராலும், மதத்தின் பெயராலும் நடைபெறும் பகிரங்கச் சுரண்டலை, படித்துப் பட்டம் பெற்றவர் முதற்கொண்டு வக்காலத்து வாங்கி வளர்த்து வந்தனர். கலாசாலை, கல்லூரிகளில் தங்கள் இனத்திற்கு மட்டும் ஏக போக இடம் ('திறமைக்கு சந்தர்ப்பம்' என்ற கோஷத்தில் மறை முகமாக) கோரினர். ஹோட்டல்களிலுங்கூட தனி இடம் கோரினர். இந்த வளர்ச்சி பெற்ற நாளிலும் 'பிராமணர் மஹாநாடு' போன்ற ஜாதீய மஹாநாடு கூட்டினர்.

இன்று வகுப்புவாதத்தை பிராமணர் சார்பில் வளர்க்கும் இழிவு வேலையை "ஹிந்து" பத்திரிகையிலிருந்து, நேற்று முளைத்த "கதிர்" வரை தங்கள் பத்திரிகைகளின் "இலட்சியங்களில்" ஒன்றைப் போலக் கருதிப் போற்றிச் செயலாற்றி வருகின்றன.

சில புள்ளி விபர உதாரணங்களுடன் இதைப் பார்ப்போம்:

"ஹிந்து" தனக்கு வேண்டியவர்களை மட்டும் சுயஜாதி என்ற காரணத்திற்காக தன் பத்திரிகையில் அளவுக்கு அதிகமாக விளம்பரப்படுத்தி வருவதை வாசகர்கள் இன்றும் நாளையும் பார்க்கலாம். உதாரணமாக ஸர். ஸி. பி. அதன் 'தேசீய இலட்சியத்திற்கு' விரோதிதான். ஆனல் அவர், ஏதோ ஒருவர் படத்தைத் திறந்து வைத்துப் பேசியது பத்தி பத்தியாகக் கொட்டை எழுத்துக்களிலும், அதே சமயம் பொதுத் தேர்தலைப் பற்றிப் பொறுப்பாகப் பேசப்பட்டிருக்கும் அரசியல் முக்கியத்வம் வாய்ந்த மற்

ளுருவர் பேச்சுக்குப் பத்து வரிகூட இல்லாமலும் வெளி வந்ததைப் போன்று, அநேகம் காணமுடியும்.

"சந்திரலேகா" என்ற படத்திற்கு தலையங்கப் பத்தி யின் கீழ் முக்கியத்வம் கொடுத்து வரவேற்றும் சிலாகித் தும் விமர்சனம் பிரசுரிக்சப்பட்டது, சுயஜாதிக்காரத் தயா ரிப்பாளர் என்பதால்தான். ஆனல் அதே சமயம் அதற்கு இணையாகத் தெனட்டில் ஓடிய "வாழ்க்கை" "வேலைக் காரி" போன்ற படங்கட்கு விமர்சன முக்கியத்வம் கொடுக்காதது ஜாதித் துவேஷ காரணமே! "தினமணியை யும்" "மித்திரனையும்" இதே ரகத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டியதே. இம்மியும் "ஹிந்து"வின் துவேஷத்திற்கு இளைத்ததல்ல, இவையும்.

'பத்தினி' வேஷம் போடும் "பாரத தேவி" மிகச் சாதாரண சின்னஞ்சிறு சீர்திருத்தச் சட்டமான சென்னை அரசாங்கத்தின் "ஹிந்துமத பரிபாலன மசோதாவை" முழு மூச்சுடன் எதிர்த்து எழுதுவது, கோவில் மான்யக் காரர்கள்—பட்டார்கள் விஷயத்தில் குறுக்கிடுகிருர்களே." என்ற குரோதத்தால்தான்!

"ஆனந்த விகடன்" 'நாரதர்' முதலிய பத்திரிகை களின், ரேடியோ நிகழ்ச்சி, மேடை விமர்சனங்களைப் பார்த்தால் சராசரி 100க்கு 91 பேர் பிராமணப் பாடகர்—பாடகிகள், நாட்டியக்காரிகளையே (படம் போட்டு) பிர சுரித்து விளம்பரப் படுத்துவதைக் காண முடியும். விஷய தானம் செய்வோரில் சராசரி 100க்கு சுமார் 88 பேர் பிரா மண எழுத்தாளர்கள். துணுக்குகளில் சராசரியாக 100க்கு 74 பிராமண வீட்டு நிகழ்ச்சிகளாகும்.

"கல்கி"யின் '46-'47-'48வது அட்டைப்படச் சராசரிக் கணக்கு ஒன்றைப் பாருங்கள்: 100க்கு 78பேர் பிராமணப் பிரமுகர்கள்; ஒன்பதுபேர் பிராமணரல்லாத பிரமுகர்கள்; பதிமூன்று இதர படங்களாகும். விஷயதானம் செய் வோரில், சராசரியாக 100.க்கு 82 பேர் பிராமண எழுத் தாளர்கள். (பிரசுரிக்கப்படும் கதை கட்டுரைகளின் 'பிரா மண பாஷை' நடையை வைத்துக் கணக்கிட்டது.) இதன் ஆடல், பாடல், ரேடியோ நிகழ்ச்சி விமர்சனங்களில்

10க்குச் சராசரி எட்டுப் புகைப்படங்கள் 'பூநூல்கலைஞர்'களுடையதாகும். வட்ட மேஜைப் பரிசில் பத்துக்குச் சராசரியாக ஏழு பேர் பிராமண வாசகர்கள் - அதுவும் ராஜாஜியை ஆதரிப்பவர்களே பெறுகிறார்கள்.

"தினமணி கதிர்" இவை எல்லாவற்றையும்விட மிஞ்சி விட்டது. விஷயதானம் செய்வோரில் 100க்கு சராசரியாக 92 பேர் பிராமண எழுத்தாளர்கள். ரேடியோ—மேடை வரிசை விளம்பரத்தில் ஏறக்குறைய 100க்கு 90 பேர் பிராமணப் பாடகர்-பாடகிகளே.

"மித்திரன்" தினப் பதிப்பு செய்திக் கலத்தில் சற்று பாரபக்ஷமில்லை. ஆனால் வாரப்பதிப்பில் பூநூல், திருநாமம் அணியாத எழுத்தாளர்கட்கு அதில் இடமே இல்லை!

"கலைமகள்" என்ற பத்திரிகையிலும் சராசரி 100 க்கு 75 கதை, கட்டுரைகள் பிராமண எழுத்தாளர்கள் எழுதுவதேயாகும். (கடந்த சில வருஷகால இதழ்களைப் புரட்டி சிரமம் கருதாமல்-சலிக்காமல் புள்ளிக் கணக்கு எடுப்பதில் எனக்கு உதவிய மதுரை நேயர்கள் **A. N.** ஹனுமந்தன், **M. T.** ஆறுமுகம் முதலியவர்களுக்கு எனது நன்றி.)

ஷை இந்தக் காரியாலயங்களில் பியூன், அச்சுத்தொழிலாளரைத் தவிர இதர எல்லோருமே ஏறக்குறைய பிராமணர்களே ஆவர்.

இதுவெல்லாம் எதைக் குறிக்கிறது? சந்தேகமறச் சொல்லிவிடலாம். சுயஜாதிக்காரர்களை மட்டும் அறிமுகப்படுத்தி ஆதரித்து விளம்பரப்படுத்துவதுதான் அவற்றின் முழுமுதல் கொள்கையாகும்!! இந்த வீதாச்சாரத்தில் பார்த்தால், பிராமணரல்லாதாரின் வகுப்புவாதம் இந்த அளவுக்கு பலமுள்ளதல்ல. கூடிப்பேசியதுபோல இத்தனை கட்டுப்பாடுள்ளதும் அல்ல. சுலபமாகத் தகர்ந்துவிடக் கூடியதே.

சரி, இத்தனை பத்திரிகைகள் இருக்கின்றனவே, இதில் ஒன்றாவது இந்நாளில் பிராமண சமூகத்திலும் அடித்தளத்திலிருக்கும்-வறுமையில் வாடும்-ஹோட்டல் தொழிலாளிகளுடையவோ-(புதிதாகத் தொழிலாளியாகி வரும்) பஸ்

ட்ரைவர், கண்டக்டர், 'மெக்கானிக்'களுடையவோ-சமீப காலமாக வேலையில்லாமல் திண்டாடித் திரியும் இளைஞர் களுடையவோ-வாழ்க்கைத்தரப் பிரச்னைக்காக அனுதாபம் காண்பிக்கவோ-வழி வகுக்கவோ செய்யும் என்று நினைக்கிறீர்களா?

அதுதான் இல்லை! முறையே பணக்கார மத்யதர வகுப்பாரின் பிரச்னைகளைத்தவிர ஏழைப் பாட்டாளிகளின் பிரச்னை வழக்கம்போல் அவர்களுக்கு ஏளனந்தான்! 'சப்த அவுன்ஸ் ரேஷன்' என்று பரிகாசக் 'கார்டூன்' போடத் தெரிகிறதே தவிர, கொதிப்புடன் 'புரட்சி' எண்ணத்தை மக்களிடையே பரப்ப அதற்கு யோக்யதை இல்லை!

(ஆ) மாற்று மருந்து என்ன?

இதற்கு மருந்து திராவிடத்தாரின் 'பிராமணரல்லாதார்' வகுப்புவாதமா? இல்லை, முற்றிலும் இல்லை!

ஆனால் இவர்கள் பரிகாரத்திற்குக் கூறும் பரிதாபகரமான யோசனைகளை-பிரச்சாரத்தைப் பார்ப்போம்.

"பாம்பையும் பாப்பானையும் ஒரே இடத்தில் பார்த்தால் முதலில் பாப்பானைக்கொல்' —தி. க, தி. மு. க-வின் சுவர் சுலோகங்கள். ஆம்! வகுப்பு வெறி ஊட்டாத பகுத்தறிவு வாதிகள் என்போரின் சுலோகங்கள்.

"மாம்பலத்தில் எங்கள் கழகக் காளையர் கறுப்புக்கொடி பிடிக்கும் ஆவேசத்தில் எங்கே ஆரிய-அந்தண-அணங்குகளிடம் அத்துமீறி நடந்துவிடுவார்களோ என்று அஞ்சினேன். அப்படி ஒன்றும் நடக்காத தறிந்து மகிழ்ந்தேன்"-திவாகருக்குக் கருப்புக்கொடி காட்டியபின், அடுத்த பொதுக்கூட்டத்தில் அண்ணாத்துரை பேசியது.

"இளம் குடும்பப் பெண்கள் பரதநாட்டியத்தின் பெயரால் பகிரங்க மேடையில் வந்து நடனமாடிவிட்டுப் 'பத்தினிவேடம்' போடுவதை பிராமண சமூகத்தில்தான் பார்க்க முடியும்"—"விடுதலை"

"பெண்ணைப் பெற்றுவிட்டு மாப்பிள்ளை வேட்டைக்காகத் தேடித்திரிபவர்தான் பிராமணர் எனப்படுபவர்" – "விடுதலை" யும், "திராவிடநாடு"ம்

இது போன்ற வாசகங்களில் சமூக சீர்திருத்தத்தின் சாய லேயா நாம் காண முடிகிறது? 100-க்கு 100 துவேஷ துர்நாற் றமே நாறுகிறது!

பாம்பைப் பார்க்கிலும் கொடிய 'யதேச்சாதிகார' முடிமன் னர்களும், 'ஏகாதிபத்திய முதலாளிகளும், 'பாஸிஸ்ட்' அரசிய லாரும் உலகில் உயிர் வாழ்வதை இவர்கள் ஏன் மறந்துவிடு கிருர்கள்? ஜாதித்துவேஷம் பிராமணர்களிடம் மட்டுமில்லையே! பிராமணரல்லாத பிள்ளை, முதலியார், நாயுடு, நாடார், செட்டி யார், ரெட்டியார், உடையார் போன்ற பல்வேறு ஜாதியினர் எல்லோரிடமுந்தான் உள்ளது. நாவிதர், வண்ணுர், தோட்டி, மற்றும் தாழ்த்தப்பட்ட வகுப்பாருடன் கொள்வது கொடுப்ப தின்றித் தனித்து வாழும் துவேஷத்திற்கு 'நட்பு'என்ரு பெயர்? அரசியலார் அனுமதிக்கும் பாலர் பாடப் புத்தகத்திலேயே "ஐயர் போகிருர்" என்றும், "வண்ணுன் வருகிருன்" என்றும் முறையே மரியாதை-அவமரியாதைச் சொற்களைப்போட்டு துவேஷத்தை வளர்ப்பதில் முளையிலிருந்தே தொண்டு செய்து வரும்பொழுது-குடிகளைக் குறைகூறித்தான் என்ன பயன்?

கருப்புக்கொடி பிடித்து நடத்தும் 'மறுப்பு இயக்கத்திற் கும்' மாம்பலம் அந்தணப் பெண்களுக்கும் என்ன சம்பந்தம்? உங்கள் கழகத் தோழர்கள் காலிகளின் கூட்டமா? பிறகு ஏன் கழகப் பொதுச் செயலாளர் அண்ணு மறைமுகமாக ஒத்துக் கொண்டு, 'வாடை பிடிக்கும் வம்பர் கூட்டம் நல்ல வேளையாக வாலாட்டாமல் நடந்து கொண்டனர்' என்று பேசியிருக்கிருர்?

மேடையில் நடனமாடுபவரெல்லாம் 'பத்தினி வேடம்' போடுபவர்களே-என்று எந்த 'அந்தப்புர' ஆதாரத்தை வைத் துக்கொண்டு திராவிடத்தார்கள் திருவாய் மலர்ந்தருளுகின் றனர்? பிராமணரல்லாத நாரீமணிகளும் நாட்டியக்காரிகளாக வும்-தாசிகளாகவும் நாட்டில் உலவுவதை ஏன் மறைக்கின்ற னர்?

'சப் கலெக்டர்' மகள் மேடையில் நடனம் ஆடுவது, பத் திரிகையின் புகழ் விளம்பரத்திற்கும், 'பெரிய இடத்து' நவ நாகரீக வரனுக்காகவுமேதான்! ஆனுல் என்னற்ற பிராமண- பிராமணரல்லாத நாட்டியக்காரிகள் வயிற்றுப் பிழைப்புக் காகவே ஆடுகின்றனர். இரத்தக் கொழுப்பினுல் 'விபச்சாரி' ஆகிறவர் ஒரு சிலரே. ஆனுல் வறுமையால் 'வேசி' ஆகிறவர் மிகப் பலர்! இந்த வேசிகளுக்கு நாம் பகிரங்கமாக வக்காலத்து

வாங்குகிறோம். ஆழ்ந்த அனுதாபத்துடன் அவர்தம் பிரச்னைகளைப் பரிசீலிக்கிறோம்.

அவர்கள் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் இந்த சமூகத்தின் கொடிய சட்டதிட்டங்களின் சம்மட்டியடி விழுந்திருப்பதை அறிந்து கவலை கொள்கிறோம். அவர்களது கவலைக் கதைகளுக்காகக் கண்ணீர் சிந்துகிறோம்! காதலிப்பவரை மணந்துகொள்ள ஏற்றத் தாழ்வு தோஷத்தால் இந்த சமூகச் சட்டம் இடம் தரவில்லை, மனம் முறிந்தவருடன் 'விவாக ரத்து' செய்துகொள்ள வசதி இல்லை. பணக்காரக் கிழவனுக்கு இளம் பெண்ணும், குஷ்ட ரோகக்-குரூபிக் கணவனுக்கு அழகி ஒருத்தியும், நினைத்தவனை விட்டுவிட்டு மற்றோர் நிர்மூடனுக்கும் பெண்ணைக் கட்டிக் கொடுத்து 'அடிமை'போல் கட்டுப்படுத்தினால், அவள் ஏன் தடுமாறி வழுக்கி விழமாட்டாள்?? முன்பே தடுக்கத் தவறிவிட்டாலும், வழுக்கி விழுந்த அபலைகளையாவது இந்தச் சீர்திருத்த இளம் சிங்கங்கள் தியாக சித்தத்துடன் அரவணைத்து ஆறுதல் பெறச்செய்து, மீண்டும் வாழும் வகையில் வளம்பெற வைக்கிறார்களா என்றால்—அதுவுமில்லை! மேடையில் 'இடி முழக்கம்' செய்வதுடன் சரி. அதிலும், 'பிரச்னையின்' ஆழமான வேரை வெட்டத் துணிவதில்லை; நுனியைத்தொட்டுவிட்டு ஓடுவதுடன் சரி!

ஏழை பிராமணர்கள் வரதக்ஷிணைக் கொடுமையால்-தங்கள் பெண்மணிகளைக் கரையேற்ற முடியாமல் கவலையால் மனம் ஒடிந்து துடிதுடிப்பதை, இந்த 'இதயமற்ற' கழகத்தினர் பரிகசிக்கின்றனர்! இதனால் எண்ணற்ற ஏழைப் பெண் திலகங்கள் பொருத்தமற்ற புருஷரிடம் சிக்கி வாழ்வை இழக்கின்றனர். அந்த அர்த்தமற்ற வரதக்ஷிணை நிபந்தனையை, ஜன சமூகத்திலிருந்தே நீக்கித் தூக்கி எறியாதவரை-எந்த 'சமூக சீர்திருத்தமும், ஏற்படப் போவதே இல்லை!

எனவே, இந்த முதலாளித்வ சமூகத்தின் சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டவர் பயங்கொள்ளிகளே ஆவர்! சமுதாய மாற்றத்திற்கு மாபெரும் "சமூகப் புரட்சி"தான் மருந்து என்பதை உணர மறுப்பவர் கத்துக்குட்டிகளே தவிர, கற்ற அறிஞர்' அல்லர்.

செயலுக்கு சாத்தியமான கொள்கை ரீதியில் நாம் சொல்கிறோம்; ஜனப் பிரச்னையை ஜாதீய நோக்குடன் பார்க்காமல் வர்க்க ரீதியில் பார்க்க வேண்டும் என்று (1.) உல்லாச வாழ்க்கை நடத்தும் முதலாளி வர்க்கம், (2.) போலி கௌரவத்

திக்காக கஷ்ட வாழ்க்கையே நடத்தும் மத்யதர வர்க்கம் (3) உண்மையில் கஷ்ட நஷ்டங்களால் அதள பாதாளத்தில் கிடந்து உழலும் உழைக்கும் வர்க்கம்.

பிராமணர்களிலும் சரி, பிராமணரல்லாதாரிலும் சரி, இம் மூன்று வர்க்கங்களிலும் சம்பந்தப்பட்ட நபர்கள் இக்காலத்தில் இருக்கிறார்கள். அவர்களுக்கு "அறிவில் புரட்சியைக்" கிளப்பி எண்ண மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமானால் எண்ணற்ற வருஷங்கள் ஆகிவிடும்! ஆனால், வாழ்வின் தினசரிப் பிரச்னையான "வயிற்றுப் பிரச்னையை"—அதற்கான பொருளாதாரப் பிரச்னையை வைத்து, ஒன்று சேர்ப்பது காரிய சாத்தியமானதாகும். இதற்கும் வர்க்க உணர்ச்சி தேவையே, ஆனால் இது தொழிலாள வர்க்கத்தினரிடம் சுலபமாக உண்டாகிறது. காரணம், அவர்கள் தொழிற்சாலைகளில் குவியலாக ஒன்று கூடுகின்றனர். அப்படி ஒன்று கூடுபவரின் "தொழிற்சங்க சக்தி"யானது முதலாளித்வ மலையை உடைப்பதற்கான உளி, உருக்குப் போன்ற உறுதியான சக்தியாகும். இது ஒன்றால்தான் முதலாளித்வ மலையை உடைப்பதற்கான உளி உருக்குப் போன்ற உறுதியான சக்தியாகும். இது ஒன்றால்தான் முதலாளித்வப் பெரும் சக்தியுடன் மோதி உருக்குலைக்க முடியும்.

ஊசலாடிக் கொண்டிருக்கும் மத்யதர வர்க்கம், முதலில் செயலில் இறங்காது. ஆனால் இவர்களுக்கும், பாடுபடுபவர்களைப் போலவே "வயிற்றுப் பிரச்னை" உண்டு. தொழிலாளர் சக்தியின் பலம் ஓங்கி வளரும் பொழுது இவர்கள் ஓடிவிட முடியாது. ஏனெனில் அப்படி ஓடினால் முதலாளித்வத்திற்குக் கொடுக்கப்படும் "இறுதி அடி" இவர்களுக்கு சேர்த்தே கிடைக்கும் என்பதை இவர்கள் உணர்ந்தேயிருப்பதால், பொது எதிரியுடன் ஐக்யம் ஆகாமல்—தொழிலாளி முகாமுடனே சேருவார்கள். இது வெறும் வரட்டுத் தத்துவம் அல்ல. உலகிலே முதலாளித்வ ஆட்சியை முறியடித்து அனாயாசமாக முன்னேறிய ரஷ்யா, யூகோஸ்லோவியா, சீனா, பிரான்ஸ், கிழக்கு ஜெர்மனி முதலிய நாடுகளின் போராட்டச் சரித்திர வரலாற்றின் கருப்பொருள் உண்மையாகும்! உலகில் கால் பாகத்தாரால் நிரூபிக்கப்பட்ட உண்மையை, தொழிலாளர் முன்னணி வளர்ந்துவரும் இந்நாளில்—எவர்தான் மறுக்க முடியும்?

முலாளித்வம் முறியடிக்கப்பட்டவுடன் ஒரே வர்க்கந்தான் எஞ்சி நிற்கும். அதுதான் பாட்டாளி வர்க்கம்! அதற்கு வேண்டுவது கேவலம் ஜாதி-சமயப் பிளவோ-அறியாமை மூட நம்பிக்கைப் பூசல்களோ-அல்ல. அதற்குப் பதிலாக எல்லோ

ருக்கும் வேலை, தேவையின் அளவுக்கு உணவு, உடை, உறைவிட வசதிகள், கல்வி-கலை, அறிவு ஓய்வு, இனிய பொழுது போக்கு முதலியன வேண்டும். அந்தப் புதிய சமூக அமைப்பில் (பாட்டாளி மக்களின் அரசாங்கம்) இவற்றிற்கு உத்தரவாதமளிப்பதுடன், செயல் மூலமும் சாதித்துக் காண்பிக்கும்.

அதாவது இவர்கள் கரடியாகக் கத்தும் சமூக சீர்திருத்தத்தை மக்களின் அரசாங்கமே, விஷம எதிரிகளின் நச்சுக் கொள்கையை நசுக்கி, சட்டம் மூலமே நிறைவேற்றிக் கொடுக்கும்!

5

சுரண்டலில் பங்கு!

'**வ**ட நாட்டுச் சுரண்டல் ஒழிப்பு' என்பதன் பெயரால் திராவிட கழகங்கள் மறியல் இயக்கம் செய்து, தங்களையும், சம்பந்தப்பட்ட ஹோட்டல்கள், ஜவுளிக் கடைகளையும் விளம்பரப்படுத்தி நேர் மாறான பலனை ஸ்ருஷ்டித்து வருவதை சென்னை வாசிகளும், பத்திரிகை வாசகர்களும் நன்கறிவார்கள்.

மிகப் பெரிய தொழில்கள் வட நாட்டு முதலாளிகளுக்கே சொந்தம் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. பாங்குகள், இன்ஸூரன்ஸ் கம்பெனிகள், துணி நெசவாலைகள், நூல் நெசவாலைகள், சர்க்கரை—சணல் ஆலைகள் முதலியன ஒரு சில வடக்கத்திய முதலாளிகளின் சொத்துக்களாகும். ஆனால் இந்நாட்டின் பொருளாதார அமைப்பு பின்னைப்பட்டுக் கிடக்கிறது.

உதாரணமாக சர்க்கார் நிர்வாகத்திலிருக்கும் மிகப் பெரிய தொழிலான ரயில்வே, தன் முழு லாபத்தை இந்திய சர்க்காருக்கு மட்டுமில்லாமல், லண்டனிலுள்ள ஆங்கிலேய முதலாளித்வ கம்பெனிக்கும் பங்கு கொடுக்கிறது. அதாவது இந்தியாவிலுள்ள ரயில்வே முழுவதையும் பிரிட்டிஷ் முதலாளிகள் சிலர் பல கோடிப் பணம் மூலதனமாக விதைத்துப் போட்டனர். இப்பொழுது, சர்க்கார், நிர்வா

கத்தை மட்டும் தங்கள் வசம் எடுத்துக்கொண்டு, ஏராள மான கோடிப் பணம், வருஷா வருஷம் ஆங்கிலக் கம் பெனிக்கு வட்டி கொடுத்துக் கொண்டு வருகிறது.

அது போல தென்னாட்டிலுள்ள சில பெரிய ஆலைத் தொழில்களும், பாங்க் பங்குகளும் ஒரு சில தென்னாட்டு முதலாளிகளுக்கே சொந்தம். இவர்களுக்கு உறு துணை யாக இருந்து பண சப்ளை செய்வது, வட இந்தியப் பெருந் தொழில் முதலாளித்வமாகும். இதில் பரஸ்பரம் இரு தாப் பாருக்கும் பெருவாரியாக லாபம் சேருகிறது.

மேலும் வெள்ளை ஏகாதிபத்தியம் வெளியேறி விட் டதே தவிர, 'பென்னி மில்' டவுணும், 'ஹார்வி மில்' டோக்கும், முதலாளித்வச் சுரண்டலை விட்டு வெளியேறி விடவில்லை. அழுத்தம் திருத்தமாக அரசாங்கப் பாதுகாப் புடன் தென்னாட்டிலும் உட்கார்ந்து கொண்டுதானிருக் கிறார்கள்!

நம் மாகாணத்தைப் பார்க்கிலும் நிலப்பரப்பிலும் ஜனத்தொகையிலும் ஆறுபங்கு அதிகமாகவுள்ள வட இந் தியா, வீதாச்சாரப்படி ஆறு பங்கே அதிக மூலதனத்தை யும் அதிகத் தொழில் வளத்தையும் கொண்டிருந்தால் இயற்கை எனக் கொள்ளலாம். ஆனால் பல பத்து மடங்கு நம் மாகாணச் செல்வத்தைப் பார்க்கிலும் அவர்களுடை யது மிகப் பெரிய அளவாகும். ஆகவே, வட நாட்டு முதலாளித்வச் சுரண்டல், வடநாட்டு மக்களுடன்கூடவே தென்னாட்டு மக்களையும் சேர்த்துச் சுரண்டுகிறது என்பது தெளிவு. இதற்கு மற்றோர் காரணமும் உண்டு. இயற்கை வளமும் தென்னாட்டைப் பார்க்கிலும் அங்கு அதிகம். கங்கை-யமுனை, பிரம்மபுத்ரா, சிந்து போன்ற ஜீவ நதிகள் விரிந்த அளவில் ஓடுகின்றன. உயர்ந்த குளிர் மலைப்பிர தேசங்களும் அதிகம். தேயிலை, சணல், கரும்பு, நவதானி யங்கள், இன்னும் பூமிக்குள் மாங்கனீஸ், நிலக்கரி வெளி நாட்டுக்கும் ஏற்றுமதி செய்யக்கூடிய அளவில் அதிகம் விளைகின்றன. ஏன், தெற்கே பற்றாக்குறை காரணமாக நமக்குத் தேவையான அரிசி, உளுந்து, துவரை, கடலை, மொச்சை, மல்லி, ஜீரகம், கடுகு, காணம், ஜீனி, சணல்

முதலியனகூட வடக்கத்திய அயல் மாகாணங்களிலிருந்து தான் இறக்குமதி ஆகின்றன. (ஆனால் தென்னாட்டிலிருந்து பருத்தி, நூல், உப்பு, வற்றல். கடலை எண்ணெய், தேங்காய் எண்ணெய், ஏலக்காய், காப்பிக்கொட்டை போன்ற சில பொருள்களே வடக்கே ஏற்றுமதி ஆகின்றன.)

ஆனால் அந்தச் சுரண்டல் ஏகபோக வடநாட்டுச் சுரண்டல் அல்ல. தெற்கத்திய முதலாளிகளும் போதிய பங்கு பெறுகிறார்கள். உதாரணத்துடனும், புள்ளி விபரத்துடனும் அதைப் பரிசீலனை செய்து விளக்குவோம்.

வடநாட்டு முதலாளியின் சென்னை ஹோட்டல் ஒன்றைஎடுத்துக்கொள்வோம். வடக்கேயிருந்து மூலதனம் கொணர்கிறார். ஆனால் பலசரக்குகளையும்வடக்கேயிருந்தே கொண்டு வருவதில்லை 'நமக்குக் கொள்முதல் அடக்கமும் கம்மியாகட்டும்; தென்னாட்டுச் சிறு முதலாளிகளும் பிழைத்துப் போகட்டும்' என்று சென்னையிலேயே ('திராவிட') வர்த்தகர்களிடமேயே அரிசி, உப்பு, புளி, மிளகாய். மல்லி, கடுகு, ஜீரகம், பருப்பு வகையறுக்கள், எண்ணெ, நெய் முதலியவற்றை லாபம் கொடுத்து வாங்குகிறார். அவரது நெய்யில் 'ஆரிய மாயை' இருக்கிறதோ இல்லையோ நமக்குத் தெரியாது. ஆனால் அடுத்த தென்னாட்டுக் கடையைப் பார்க்கிலும் அதிகப்படியான ருசியுடன் அதே விலைக்குச் சரக்கைக் கொடுத்துக் கூட்டத்தை சுலபமாக இழுக்கக் கற்றுக் கொண்டிருக்கிறார். கண்கட்டிக் காசு வாங்குவதோ-'வா வா' என்று அழைப்பதோ இல்லை. வடநாட்டிலிருந்து 'சப்ளையர்' 'க்ளீனர்'களை அழைத்து வருவதுமில்லை.

நீங்கள் என்னதான்கத்தினாலும் வடநாட்டு முதலாளிகளை மூட்டை கட்டி அனுப்ப முடியவில்லை; முடியாது உங்களால்! ஏனெனில் துமபை விட்டுவிட்டு வாலைப்பிடிக்கும் கதைதான் நீங்கள் நடத்துவது. ஆனால் இந்தச் சுரண்டல் வகையறுக்களை தொழிலாள வர்க்கம் முயன்றால் ஒழித்துச் சாதிக்க முடியும். ஆம்; ஹோட்டல் முதலாளிகளும், வர்த்தகக் குமாஸ்தாக்களும் ஒரு தொழிற்சங்க சக்திக்குள் ஐக்கியமாகி, "வேலை நிறுத்தம்" அல்லது "விட்டுவிட்டு வெளியே

போ’ என்ற இயக்கத்தின்கீழ் கட்டுப்பாடாகப் போராட்டத்தைத் துவக்கிவிட்டால், 24 மணி நேரத்திற்குள் நாம் பலனைக் காணமுடியும். போராட்டம் நடத்துவது சுலபம். ஆனால் போராட்ட சக்தியைத் திரட்டுவதுதான் சிரமமான பெரும் வேலை. ஒரு வகுப்புவாத இயக்கம் இத்தகைய சக்தியைத் திரட்ட முடியாது. ‘தொழிலாள வர்க்கத்தின் அரசியல் கட்சி’ ஒன்றுல்தான் தொழிற்சங்கக் கொடியின் கீழ் இதைச் சாதிக்க முடியும். உண்மையிலேயே சுரண்டலை ஒழிக்கக் கழகத் தோழர்கள் விரும்பினுல், அவர்கள் தொழிற்சங்க வாதிகளாகவும், தொழிலாள வர்க்கத்தின் அரசியல் கட்சியினராகவும் மாறவேண்டும். சரித்திரம் கற்பித்த இந்த உண்மையை உணர்பவர் எத்தனை பேர்?

வண்ணுரப்பேட்டை தி. மு. கழகப் பருப்பு முதலாளியும், எண்ணெக்கடை காங்கிரஸ்காரச் செட்டியாரும், பல சரக்குக்கடை பெரியார் கட்சி நாடாரும் ‘‘ஆரிய பவான்’’ முதலாளிக்குச் சரக்குக் கொடுத்து லாபம் பெறத்தான் செய்கிருர்கள். தென்னுட்டுத் தொழிலாளர் சிலருக்கும் சம்பளம் கிடைக்கிறது. சிந்தித்துப் பாருங்கள், இதில் தனி வடநாடு மட்டுந்தான் லாபம் பெறுகிறதா?

‘‘ஒயிட் ஹவுஸ்’’ என்ற ஸேட் ஜவுளிக்கடை ஒன்றை எடுத்துக் கொள்வோம். இந்த வட நாட்டு ஸேட், அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான் முதலிய வெளிநாட்டு ஜவுளி வர்த்தகர்களிடமிருந்து உயர்தர ஸில்க், மில் துணிகளை லாபம் கொடுத்து வாங்கி மூன்றில் ஒரு பங்குக்கு வருத்துகிருர். பம்பாய் ஆமதாபாத் மில் துணிகள், கராச்சி பட்டு முதலியவைகளுக்கு லாபம் கொடுத்து மூன்றில் ஒரு பங்கு வருத்துகிருர். தென்னுட்டில் கோவை, சேலம், மதுரை, காஞ்சீவரம், பெங்களூர் முதலிய இடங்களில் முறையே நூல் கைத்தறித் துணிகளையும், பட்டு ரகங்களையும், சென்னை—மேட்டூர்—கண்ணனூர் மில் துணிகளையும் தெற்கத்திய முதலாளிகளுக்கு லாபம் கொடுத்து மூன்றில் ஒரு பங்கு (சில சமயம் தெற்கத்திய ஜவுளி சரிபாகங்கூட உண்டு) வாங்கி ‘ஸ்டாக்’ செய்கிருர். பெங்களூர், காஞ்சீவரம் பட்டுக்களும், மதுரை சேலம் கைத்தறித் துணிகளும்,

பம்பாய், சென்னை, மேட்டூர் மில் துணிகளுமே தென்னாட்டில் பிரதான விற்பனை, மறக்க வேண்டாம். முறையே அயல் நாடு, வட நாடு, தென்னாட்டு ஜவுளி உற்பத்தி முதலாளிகள் சராசரியாக சம லாபம் பெறுகிறார்கள். ஆகவே ஜவுளியிலும் தனி வட நாட்டுச் சுரண்டல் கிடையாது தென்னாட்டுக் கலப்புச் சுரண்டலும் உள்ளது மேலும் தெற்கத்திய ஜவுளிக்கடை முதலாளிகள் தென்னாட்டு 'தேசபக்தியால்' விலையைக் குறைத்துக் கொடுப்பதில்லை. ஸேட் தெற்கத்திய முதலாளிகளைவிட கூட்டிக் கொடுப்பதுமில்லை. இங்குதான் மற்றோர் ரகசியம் இருக்கிறது. விலை என்ற நிர்ணயம் முதலாளித்வ சமூக அமைப்பில் இப்படித்தான் பின்னிக் கிடக்கும். லாபத்திற்காக முதலாளிகளே நிர்ணயிப்பதாகும்.

ஜனங்களின் தேவைக்கான துணிகளைவிட, அதிக லாபத்திற்கான துணிகள்தான் முதலாளிகளால் உற்பத்தி செய்யப்படும்.

வட நாட்டு ஸினிமாப் படங்களை எடுத்துக் கொள்வோம். தென்னாட்டிலுள்ள ஹைதராபாத், பெங்களூர், சென்னை படவிநியோக முதலாளிகள், பம்பாய் போன்ற இடங்களில் பணம் கொடுத்து உரிமை வாங்கி, தென்னாட்டுத் தியேட்டர் முதலாளிகளிடம் திரையிட்டுச் சம பங்கு லாபம் பெறுகிறார்கள்.

சென்னை பத்திரிகை ஒன்று, "ஹிந்தியையும் வட சுரண்டலையும் எதிர்ப்பவர்கள், ஹிந்திப் படங்களை மறந்து விட்டீர்களே" என்று அழுகுரல் எழுப்பியது. "ராமா — கிருஷ்ணா — முருகா" என்ற தமிழ் நாட்டு 'முஹாரி' மேடை, ரேடியோ, ஸினிமா "பஜனை"களைக் கரடு முரடான குரலில் கேட்டுக் கேட்டுப் புளித்துச் சலித்த தென்னாட்டினர், ஹிந்தியின் சுலபமான மெட்டு—இனிமையான கீதத்தைத் தங்களை அறியாமலேயே கேட்கத் துடிப்பதை, 'பத்திரிகை' உணர வேண்டும். மேலும் கலையும், சங்கீதமும் "துவேஷத்திற்கு" அப்பாற்பட்டது. "கலை கலைக்காக அல்ல; மக்களுக்காக"—என்பதையும் சம்

பந்தப்பட்டவர்கள் மறக்க வேண்டாம்! அதே சமயம் 'ஹாலிவுட்' படங்களைவிட 'ஹிந்திப்' படங்கள் அவர் கண்களை உறுத்தியதன் காரணம் நமக்கு விளங்கவில்லை!

பரிகாரம் என்ன?

எனவே, இவர்கள் சாதாரண 'அடையாள மறியல்' என்று மேலெழுந்தவாரியாகத் தொட்டுவிட்டு ஓடப்பார்க்கும் பிரச்னை, இந் நாட்டின் "உணவு, உடை பிரச்னை" ஆகும்.

விவசாயத் தொழில் கிராம மக்களின் கூட்டுப் பண்ணையாகவும், ஆலைத் தொழில் தொழிலாளரின் உழைப்புச் சொத்தாகவும் ஆக்கப்பட்டா லொழிய இதற்கு வேறு பரிகாரமே கிடையாது.

ஏனெனில் அந்த வருங்கால உழைப்பாளி அரசாங்க அமைப்பில் ஜனங்களின் தேவைக்கான அளவு நிர்ணயிக்கப் பட்டு, மனித சக்தியின் திறமை—ஆரோக்கியத்திற் கேற்ப வேலை வாங்கப்பட்டு, "திருப்திக்கான வினியோகம்" செய்யப்படும். அப்பொழுது 'உற்பத்தி முதலாளிகள்' என்ற "திமிங்கிலங்களும்," 'வர்த்தகர்கள்' என்ற "சுறு மீன்களும்," 'சில்லரை வியாபாரிகள்' என்ற விரால் மீன் களும், 'பொது மக்கள்' என்ற "சிறு மீன்களைத்" தின்ப தற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள். அதற்குப் பதி லாக விவசாயி—'தொழிலாளரின் பொருள் உற்பத்தியும் (Productions), அவர்களுக்கு வினியோகிக்கும் கூட்டுற வுப் பண்டகசாலை முறையுமே (Co-operative System) இருக்கும்.

யாரும் யாரையும் சுரண்டும் கொள்கைக்கோ—பேச் சுக்கோ அதில் இடமே இல்லை! அதுதான் இந்த முதலா ளித்வ உற்பத்தி—வினியோகப் பிற்போக்கு முறையைத் தலைகீழாக மாற்றி யமைக்கும் சோஷலிஸ அமைப்பு!

6

அரசியல் கொள்கைதான் என்ன?

"திராவிட நாடுதான் இலட்சியம்" என்று திராவிட கழகங்கள் இறுதியாகக் கூறுவதானல், அவை வெறும் சீர்திருத்த இயக்கமாக இராமல், அரசியல் கட்சியாக மாறியிருக்க வேண்டும். ஜனங்களிடம் "திராவிட நாடே எமது இலட்சியம்" என்ற திட்டத்தை வைத்து, தேர்தலில் நின்று ஜெயிக்கவேண்டும். இயக்கம் கட்சியாக மாருவிட்டால், அதற்கு 'அரசியல் கொள்கை' கிடையாது என்று தான் பொருள்.

"திராவிட கழகம் ஒரு பிரச்சார இயக்கமே"—அண்ணுத்துரை, "திராவிட நாடு" & "மாலை மணி"

'அரசியல் கொள்கை' இல்லாமல் திராவிட நாடு இலட்சியத்தை அடைய முடியாது. அரசியல் கொள்கை என்பது வெறும் பொழுது போக்குப் பேச்சோ—கேலிக் கூத்தோ அல்ல. அதற்கு மக்கள் சமுதாயத்தையே மாற்றி அமைக்கும் பெரும் சக்தி இருக்கவேண்டும். அந்த சக்தி பொது மக்களின் 'அமோஹமான ஆதரவு' என்ற அடிப்படையில்தான் உருவாக முடியும். பொது மக்கள் ஆதரவற்ற எந்த அரசியல் கொள்கையும் போலியே ஆகும்.

(ஆ) "நான்கு தூண் திட்டம்" ஒன்றே வழி!

விந்தியத்திற்குத் தெற்கே உள்ள பிரதேசம், 1. மஹராஷ்ட்ரம், 2. ஆந்திரம், 3. தமிழ்நாடு, 4. கர்னுடகம், 5. கேரளம் என்ற ஐந்து "தேசீய இனங்களைக்" கொண்டிருக்கிறது.

இந்த ஐந்தும். மக்கள் இயக்கத்தால் ஒன்று சேர்ந்தாலொழிய "திராவிட நாடு இலட்சியம்" கைகூடப்போவதில்லை. ஆனல் தமிழ்மொழி பேசுவோரில் ஒரு சிலரிடம் தவிர இந்தத் 'தனி ஸ்'தானுக்கு' இதர தென்னுட்டு தேசீய இனத்தாரின்

ஆதரவுஇல்லை. மேலும் இதர நான்கும் ''சுய நிர்ணய உரிமை'' பெற்று சுயாட்சியைக் கொண்ட தனி மாகாணங்களாக அமைந்தாலும், மத்தியப் பொறுப்புக்கு டில்லியை நம்பித்தான் இருக்கும்.

இப்போதுள்ள முதலாளித்வ ஆட்சியே நீடிக்குமானால் மத்ய அரசிடந்தான் வழக்கம்போல் அதிக அதிகாரம் இருந்து வரும். அந்த அரசு ''மாகாண சுயாட்சியையே'' வழங்காது வழங்கினாலும் முக்கிய அதிகாரம் ஒன்றும் இருக்காது

இறுதியான பரிகாரம் இதற்கும் ஒரு சோஷலிஸ்ட் ஆட்சியின் ''நான்கு தூண் திட்டத்தில்தான்'' (Four Pillairs Plan) இருக்கிறது.

1, கிராமம் (பிரதேசம்) 2, ஜில்லா, 3. மாகாணம், 4. மத்யம் ஆகிய நான்கு கேந்திர அதிகாரப் பிரிவு இயந்திரங்களிலும், அரசியல் பொருளாதார சமூக நிர்வாகப் பொறுப்புக்கள் பரவலாக அமைந்திருக்கும்.

பிரதேசப் பிரச்னையைப் பிரதேசமே தீர்க்கும். அதாவது சிறு கிராமத்திற்குங்கூட மிகப்பெரிய பொறுப்பதிகாரம் இருக்கும், அப்போதுதான் அரசியல் இயந்திரம், பொதுமக்கள் பிரச்னையை சுறுசுறுப்பாக கவனித்து விரைவில் பணியாற்றும். இதில் ஒரு விசேஷத்தை கவனியுங்கள், திராவிடத்தார் மாகாணத்துக்கு மட்டுமே அதிக அதிகாரம் கோருகிறார்கள், ஆனால் ஒரு 'ஸோஷலிஸ்ட் ஆட்சித் திட்டத்தில்,' அடிப்படையான கிராமத்திற்குக்கூட அதிகப்படியான அதிகாரம் இருக்கிறது. ஏன்? இதில், பிரச்னையை அதி விரைவில் தீர்ப்பதற்குத்தான் முக்யத்வமே தவிர, முதலாளித்வ அரசுகளில் மாதிரி ஐம்பது ஆபீஸர்களையும்—அலுவலகங்களையும்-மாதம் வருஷம் என்று சுற்றி ம்திப்புக்காகவும் அந்தஸ்துக்காகவும் அதிகாரம்வைத்துள்ள அமைச்சர்களிடம்போய் ஒவ்வொரு பிரச்னையும்காத்துக் கொண்டு நிற்காது!

நாட்டின் செல்வமும் பரவலாகப் பகிர்ந்து தொழில் மயமாக விஸ்தாரம் செய்யப்படும். நகரங்களிலேயே (இந்நாளில் போல) தொழில்கள் குவிந்து கிடக்காது! பருத்தி விளையும் கிராமத்திலேயே பஞ்சாலை நிறுவப்படும், கரும்பு விளையும் வயலருகேயே ஜீனி ஆலை நிறுவப்படும், நெல் விளையும் பிரதேசத்திலேயே அரிசி ஆலையும் ஏற்படும், இதற்கு அனுசரணை

யாக ரயில், கார், போன்ற போக்குவரத்தும் ஒவ்வொரு கிராமங்களுக்கும் இணைக்கப்படும் மின்சாரமோ ரஸ்தாவோ இல்லாத கிராமமே இருக்க முடியாது.

அது போலவே ஆறு, குளம், மலை போன்ற இயற்கை வளத்திலிருந்து கிடைக்கும் பிரதிப்பிரயோஜனத்தை பிரதேசத்தின் தேவைபோக, பற்றுக்குறை அண்டைப் பிரதேசத்திற்கும் கிடைக்கும்படி விஞ்ஞான ரீதியில் விரிக்கப்படும். நீர்ப்பாசான அணைக்கட்டுத் திட்டத்துக்கோ-மின்சார அபிவிருத்தித் திட்டத்திற்கோ ''பணம் இல்லை'' என்று கைவிரிக்கும் இன்றைய அரசாங்கத்தின் அலக்ஷியம், வருங்கால ஸோஷலிஸ்ட் அரசாங்கத்தின், முதல் ''ஐந்து வருஷத் திட்டத்திலேயே'' முக்கியத்வம் பெறும்.

மாகாணங்கள் மொழிவாரியாக எல்லையிட்டுப் பிரிக்கப்பட்டு, தனி அரசு செலுத்தும் வருமானத்தின் பெரும் அளவைப் பிரதேசமே பிரயோஜனப்படுத்தும் ஓரளவு வருமானத்தை மட்டும் மத்ய அரசுக்குச் செலுத்தும். தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனப் பிரதிநிதிகள் ஜன வீதாச்சாரப்படி மத்ய அரசில் பொறுப்பு வகிப்பார்கள். மாகாணங்களுக்கும்-மத்யத்திற்கும் எல்லா வயது வந்தோர் வாக்களிப்பு வாயிலாகவேபிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

பல்வேறு தேசிய இனங்களைக்கொண்ட மொழிவாரி மாகாணங்களின் கூட்டுப் பொறுப்பான இணைப்பே மத்ய அரசாகும். அந்த மத்ய அரசு, மாகாணங்களிலிருந்து பெறும் வருமானத்தைக்கொண்டு நாணயம், தபால், தந்தி, போக்குவரத்து, படைபலம், வெளிநாட்டு விவகாரம்-இவற்றிற்கு முழுப் பொறுப்பேற்று நிர்வாகம் நடத்திவரும் மாகாணங்களின் தாய்பாஷை விஷயத்தில் அணுவளவும் குறுக்கிடாது.

பெருவாரியான 'பாடுபடும் மக்களின் அரசு' ஒன்றுல்தான் இதைச் சாதிக்க முடியும் பாட்டாளி மக்களைக் கொண்ட பலம் வாய்ந்த ''அரசியல் கட்சியால்தான்'' அப்படிப்பட்ட அரசைக் கைப்பற்றி அமைக்க முடியும்—என்பது சரித்திரம்கண்ட முடிவு.

அதற்கான அரசியல் கட்சி ஒன்றைத் தேர்ந்தெடுப்பது தான் இன்று தமிழ் மக்களுடைய கடமையுமாகும்.

7

கொடியில் சிவப்பு ஏன்?

சரித்திரம் என்ன ?

வருங்காலம் செங்கொடியினுடையது என்பதைப் படித்த—படிக்காத எல்லோருமே உணர்ந்திருக்கின்றனர். அது பாட்டாளி மக்களின் கொடி என்பதை உலகச் சரித்திரம் உணர்த்தி வருவதும் ஒரு காரணம்.

ஆனல் அரசியல் கொள்கையற்ற தி. கழகமும, தி மு. கழகமும் சிவப்பைப் பொறித்திருப்பதன் மர்மம் என்ன? அவை விவசாயி—தொழிலாளப் பெருமக்களின் ஸ்தாபனங்கள் அல்ல. அரசியல் விடுதலைக்கோ—பொருளாதார விடுதலைக்கோ—அல்லது அவர்கள் கூறும் சமூக விடுதலைக்கோ இரத்தம் சிந்தினதாகச் சரித்திரம் இல்லை.

ஆனல் மக்கள் "சிவப்புச் சின்னத்திற்கு" மதிப்பளிக்கிறார்கள் என்று கருதியே, உள்ளே 'சிவப்பை' ஏமாற்றுக்காக நுழைக்கிறது.

பாடுபடுபவருக்குப் பாடுபடாத —இரத்தம் சிந்தாத— 'சொற்பொழிவு இயக்கத்தின்' வெறும் சிவப்புக் கலப்புக் கொடியை, மக்களும், சரித்திரமும் 'வர்ணப் பூச்சு' என்று தான் கொள்ளும்! உழைப்பாளி வர்க்கம் சிந்திய இரத்தத்தால் சிவப்பேறிய உதிர நிறக் கொடிதான் உண்மைப் பாட்டாளிகளின் கொடியாகும்!! அதுதான் நிலைத்து சரித்திரத்தில் இடம் பெறக்கூடிய பாட்டாளிகளின் செங்கொடி ஆகும். இதை உலகம் ஒப்புக்கொள்கிறது.

மே தின 'மீட்டிங்'கை யாரும் கூட்டிப் பேசிவிடலாம். ஆனாலும் அதற்கோர் யோக்யப் பொறுப்பு வேண்டும். இலட்சிய உறுதி வேண்டும். சமுதாய மாற்றத்திற்கு 'வர்க்கப்போர்' மீதும், பாட்டாளிகளின் 'போராட்ட சக்தி' மீதும் நம்பிக்கை கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்.

கூடிக் கலையும் கூட்டம் என்றுமே 'இயக்கம்' ஆகாது! அது அடிப்படை பலம் இல்லாத வீடு போன்றதாகும்.

கருப்புக் கொடி காண்பிக்கும் சாதாரண ஜனநாயக உரிமையை சென்னை அரசாங்கம் போலீஸை வைத்துப் பறிப்பது, மற்றும் பெரும் தொகையைப் பத்திரிகைகளிட மிருந்து ஜாமீன் கேட்பது, ஐந்தாறு வருஷங்களுக்கு முன்பு எழுதிய புத்தகங்களுக்கு திடீர் 'ஞானோதயம்' பெற்று மக்களைக் காப்பது போல் தடை விதிப்பது, சிறைப்படுத்துவது, பொருளை ஏலத்தில் விடுவது—போன்ற அரசாங்கத்தின் ஆணவமான நடவடிக்கைகள், அரசியல் நிர்ணயத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள "எழுத்துரிமையைப்" பறிக்கும் விதத்தில், அக்கிரமமாகக் கையாளப்படுகின்றன என்பதில்—கழகத்தினர்களுக்காக நாமும் நம் முழு அனுதாபத்தைத் தருகிறோம்.

ஆனல், இந்தத் தோழர்கள் 'கருங்கொடி பிடிக்கிறோம்' என்று விளம்பரப் படுத்திவிட்டு, போலீஸாருக்குப் பயந்து ஓடுவது கொஞ்சமும் அழகல்ல. (செய்தி: 'மித்திரன்' 'தினமணி' 'தினசரி'யிலிருந்து. ராஜாஜி,—மெஹதாப் வருகையின்போது) இது கோழைத்தனமான செயலாகும். சட்டரீதியான—'ஆயுதமில்லாத அமைதியான அறிவிப்பு' என்ற முறையில், உங்கள் கோரிக்கையில், கொள்கையில் நேர்மை இருக்குமானல், நியாயம் இருக்குமானல், மக்களுடைய ஆதரவிருக்குமானல் காலிக் கூச்சலில்லாமல் கட்டுப்பாடாக போலீஸின் பலாத்கார அடக்குமுறைகளை எதிர்த்து, அடி தடிக்கும்—என், குண்டுகளுக்குங்கூட அஞ்சாமல் ஸ்தலத்திலேயே நின்று தியாகம் செய்வதே போராட்டத்திற் குரிய லக்ஷணமாகும்!

மதுரை மஹாநாட்டில் போல,—சென்னை இயக்கங்களில் போல—போலீஸுக்குப் பயந்து ஓடுவதானது, "கழகங்கள் செயலுக்குத் தயாராக இல்லை; வெறும் கூச்சலே எங்கள் இயக்கம்" என்பது நினைவூட்டுகிறது. ஒன்று செயலற்ற இக் கழகங்கள் முற்போக்குச் சக்திகளுடன் இணையவேண்டும். அல்லது அழிய வேண்டும். இதுவே நிலை. சிந்தித்துச் செயலில் இறங்குங்கள்.

மேலும் தோழர்கள், M.R. ராதா, குருசாமி, C. N. A. முதலியவர்கள் மறியல் செய்யப் போகிறவர்க்கும், கைதியாகிப் போகிறவர்க்கும் முறையே தலை ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு இரண்டு ரூபாய் கூலி கொடுத்து அனுப்பியதாக கழக உறுப்பினர் ஒருவரே செய்தி அறிவிக்கிறார்! இது கேவலம் மட்டுமல்ல, கீழ்த்தரமான செயலுங் கூட! கழகம் பலஹீனத்தால் அழுகிக் கீழே விழுவதின் அறிகுறி இது!

ஆகவே, ஆரியத்தில் மாயை கொண்டவர்களும் சரி, திராவிடத்தில் "மாயை" கொண்டவர்களும் சரி, சமுதாய விடுதலைக்கு முறையே கடவுள்களையும், 'எண்ண முதல் வாதத்தையும்' (Idealism) அடிப்படையாகக்கொண்டு, மானஸீக மணல் வீடுகளை எழுப்புகின்றனர்.

'பொருள் முதல் வாதம்' (Materialism) உலகம் முழுக்க வளர்ந்து வியாபித்து வரும் இந்நாளில்,—உலக மக்களே ஒன்று கூடி "வாழ்வதா?" அல்லது "மாளுவதா?" என்ற ஒன்றில் முடிவுக்கு வந்து, சுபிட்ச சோஷலிஸ சமுதாயப் புது வாழ்வுப் புனரமைப்புக்குத் தயாராகிவிட்ட இந்நாளில்,—கேலிக் கூத்தான இவ்விரண்டு மாயைகளும் கால வெள்ளத்தால் மாண்டு மறைந்து இருந்த இடம் தெரியாமல் போம் என்பது திண்ணம்! ஆகவே, நாட்டைப் பாழாக்காமல், கீழ்த்தர உணர்ச்சிகளைக் கிளரும் பேச்சு, புத்தகம் உருவாக்கும் பணியில் இறங்காமல், நீங்களும் மாயையில் மயங்கி—பிறரையும் மயங்கச் செய்யாமல் திருந்துங்கள். இன்றேல் மக்கள் திருத்துவார்கள் என்பதை எச்சரிக்கை செய்கிறோம்.

NADU ARCHIVES LIBRARY
No. 112141

இதையும் படியுங்கள்!

கடவுள், மதம், ஜாதி, சாஸ்திரம், இதிகாசம் என்ற கற்பனைகளைவைத்து கோயில்—மடம்—மடாலயம்—புரோகிதம் என்று சொல்லி அறியாமையைப் பயன்படுத்திப் பிழைக்கிறது ஒரு கூட்டம்.

அவர்களைத் திட்டுவது, பழைய குப்பைகளைக் கிளரி, கிளரி அடுக்குவார்த்தைகளில் வசைபாடுவது, சாதாரண ஜனங்கள் கேள்விப்பட்டே இராத பல கற்பனைக் கடவுள்களின் பிறப்பு வளர்ப்புகளை ஆராய்ச்சியின் பெயரால் மாணவர்களுக்கும், மற்றவர்களுக்கும் ஆபாசமாக சித்தரித்துக் காட்டுவது போன்ற வெறும் பிரசாரத்தால் ஆஸ்திகக் கூட்டத்தை—ஆரியர்களை வேரறுக்கும் நாஸ்திகக் கூட்டம் என்று ஒரு காலத்திலே மார்தட்டிவிட்டு, இன்று நாங்கள் நாஸ்திகர்களல்ல! பல கடவுள்களில்லை என்றே சொல்கிறோம் என்று பல்டியடித்து ஆரியர்களை ஒழிக்கும் வீரர்கள் என்று பேசித்திரிந்து பொருள் சேர்க்கும் திராவிடக் கழகம்—திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு கூட்டம்.

தி. க., தி. மு. க வை கீழ்த்தரமாக—ஆபாசமாகஎழுதிப் பேசி எந்தக் குறிக்கோளும் லக்ஷியமுமில்லாமல் சாக்கடையைச் சுத்தம்செய்ய சாக்கடைத் தண்ணீரை ஊற்றி கழுவுவது போல வியாபாரமாக—பிழைக்கும் வழியாக நினைத்து வாழ்க்கை நடத்தும் ஒரு கூட்டம்.

இதற்கு மறுப்பு என்ற பெயரால் பத்திரிகை புத்தக விற்பனைக்காக அதே சாக்கடை பாஷையில் சரிக்குச்சரி எழுதி வயிறு பிழைக்கும் ஒரு கூட்டம்.

இந்த நாலு கூட்டமும் பொது மக்களை சதுரங்கக் காயாக வைத்துச் சூதாடுகின்றன. பத்திரிகை–புத்தக விற்பனையில் பணம் சேர்க்கிறார்கள். கூட்டங்கள்—உபன்யாசம்—மாநாடுகள்—ட்ராமா—சினிமாவின் மூலம் கொள்ளையடிக்கிறார்கள். இந்த நாலு கூட்டத்தையுமே அம்பலப்படுத்தி இவர்களின் நிஜ சொரூபத்தைக் காட்டவேண்டும் என்பதே எங்கள் முயற்சி. அதே சமயம் நாங்களும் சிறிது பணம் சேர்த்து பயனடைகிறோம் என்பதை மறைப்பதற்கில்லை. ஆனால் ஜனவிரோதக் கூட்டங்களுக்கு சிம்ம சொப்பனமாகக் காட்சியளித்து அதிகம் மக்கள் இக்கூட்டங்களின் மாயையில் விழாமல் தடுக்கிறோம் என்பதற்காகப் பெருமைப்படுகிறோம். மக்கள் சிந்தித்து பயனற்ற இக் கூட்டங்களை ஒழிக்கும் பணிக்கு இப்புத்தகம் சிறிதேனும் பயன்படுமானால் அதுவே எங்கள் முயற்சியின் வெற்றி!

நிர்வாகி

திராவிடமாயை

0-8-0

திரு பெரியகருப்பன் எழுதிய காதல்—கற்பனை ஓரங்க நாடகம். பலராலும் புகழப்பெறுகிறது. கிழவனுக்கு குமரியா? என்ற பிரச்னைக்கு நீதி வழங்குகிறது.

இது என்ன சிரிப்பு 0—4—0

* * *

திரு. ரகுநாதனின் சிறந்த சிறுகதைகள், உள்ளத்தை உலுக்கும். குறைந்த பிரதிகளே இருக்கின்றன.

நீயும் நானும் 0—10—0

* * *

திரு. கு. மா. பாலசுப்ரமணியத்தின் இணையற்ற சிறுகதைகள், உள்ளத்தைத்தொடும்.

சூடிய மலர் 0—6—0

* * *

'ரசம்' எழுதிய ஒப்பற்ற காதல் கதைகள், அதில் மானத்தின் விலை எட்டணுவா என்று காமவெறியர்கள் மீது ஆத்திரத்தை உண்டாக்கும் கதையும் இடம்பெறுகிறது.

திரை விலகியது 0--6—0

* * *

திரு. தி. க. சிவசங்கரன் தமிழாக்கிய உலக அரசியல் தந்தை, ஒப்பற்ற மேதை மார்க்ஸின் குடும்ப வாழ்க்கையை அவர் பேரன் எத்-கார்-லொங்கே எழுதிய வாழ்க்கையும்—சீனச்சிறுகதையும் சேர்ந்தது.

காரல்மார்க்ஸ் இல்வாழ்க்கை 0—6—0

நமது சிறுவர் வெளியீடுகள்.

ஏழைத் தம்பி	சண்முகம்	0-2-0
ராமு எங்கே ?	,,	0-2-0
ரொக்கப் பரிசு	தெய்வசிகாமணி	0-2-0

நம்மிடம் கிடைக்கும் வெளியீடுகள்.

என் தம்பி	பெரியகருப்பன்	0-1-0
போலிச் சாமியார்	,,	0-1-0

சுதர்சன் & கோ.

தேவகோட்டை.

★

HAIR OIL

குளிர்ந்த மணமுள்ள

எங்கள் ஹேராயில்

உபயோகியுங்கள்.

SUDHARSON & CO

DEVAKOTTAI.

கருப்புத் தோழர்களே!

புத்தி தெளிந்து எங்கள் கோஷத்தில் வழக்கம்போல 'புரட்சி' என்று பல்டியடிக்கப் போகிறீர்களா?

இது சூழ்ச்சி! ராவணன் எங்கள் மறத் தமிழன் என்று ஆதாரம் காட்டப்போகிறீர்களா?

உங்கள் அறிவும் இருளடைந்த 'கருப்பு' என்று அம்பலப்படுத்த ஆராய்ந்து ஆதாரபூர்வமுடன் எழுதிய சிறந்த நூல்!

படித்து பதில் கூறுங்கள்.

இராவணன்-ஓர் பிராமணன்!

* * *

எழுதியவர்: பெரியகருப்பன்.

* * *

சுதர்சன் & கோ.,

தேவகோட்டை.

யுனைட்டெட் பிரிண்டர்ஸ், காரைக்குடி.